★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜுன் 20 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 தினகரன්

வரு. 92 இல. 146 | Thursday 20, June, 2024 | 16 பக்கங்கள் | 50/-




# கைத்தொழில் துறைக்கு நிதியுதவி வழங்க புதிய அபிவிருத்தி வங்கி



## சிறு மற்றும் நடுத்தர தொழில்களை வலுப்படுத்த "Enterprise Sri Lanka" என்ற பெயரில் புதிய நிறுவனம்

**நீதிமன்றத்துக்கு செல்வதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. தேசிய கொள்கையின் ஊடாகவே முன்னோக்கிச் செல்ல வேண்டும் - ஜனாதிபதி**

இலங்கையில் தொழில்துறையினருக்கு நிதியுதவி வழங்க புதிய அபிவிருத்தி வங்கியொன்று ஸ்தாபிக்கப்பட உள்ளதாகவும், இதன் மூலம் தொழில்துறையினருக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிட்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பொருளாதார ஆணைக்குழுவொன்று உருவாக்கப்படும் என்றும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்த "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" என்ற புதிய நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்படும் என்றும் ஜனாதிபதி 06

## இந்திய வெளிநாட்டமைச்சர் இன்று இலங்கைக்கு விஜயம்



**ஜனாதிபதி, பிரதமருடனும் பேச்சு**

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இன்று (20) கொழும்பு வரவுள்ளார். இவரது விஜயத்தை வெளிவிவகார அமைச்சும் நேற்று 06

## தபால் முத்திரை விலையை அதிகரிப்பதற்கு தீர்மானம்

தபால் முத்திரை ஒன்றின் குறைந்தபட்ச விலையை 100 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

இதற்காக திறைசேரியின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 06

## 'மலையக தசாப்தம்' (கந்துகர தசகய) திட்டத்தின் கீழ்

# ரூ. 9,622 மில். செலவில் 97 பிரதேச செயலக பிரிவுகளில் 14,088 திட்டங்கள் ஆரம்பம்

**யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் வீட்டு தேவைகளில் 89 வீதம் 2023 இறுதியில் பூர்த்தி**



**நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சின் ஊடக மாநாட்டில் தெரிவிப்பு**

'மலையக தசாப்தம்' ('கந்துகர தசகய') பத்து சிறப்பு ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 97 பிரதேச செயலகங்களில் 14,088 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக இவ்வருடம் 9,622 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ் சத்தியானந்த தெரிவித்தார்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் வீட்டுத் தேவைகளில் 89 வீதமானவை 2023 இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மொத்தமான மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தில் இதுவரை 2,75,127 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ்.சத்தியானந்த 06

## கடற்றொழில் அமைச்சின் புதிய செயலாளராக நிசாந்த விக்கிரமசிங்க



கடற்றொழில் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள நிசாந்த விக்கிரமசிங்க நேற்று (19) அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றார். இவருக்கான நியமனக் கடிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்டது.

முன்னாள் செயலாளர் செல்வி நயனாகுமாரி 06

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களூடாக நாட்டுக்கு ரூபா 11.3 பில்லியன் வருவாய்



லோரன்ஸ் செல்வநாயகம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக 2023 இல், வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை 02 இலட்சத்து 89 ஆயிரத்து 287 பேர் என்றும் இவர்கள் 5,970 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டுக்கு அனுப்பியுள்ளதாகவும் தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் 06

## பொசன் பௌர்ணமி தினத்தன்று சகல மதுபானசாலைகளுக்கு பூட்டு

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை (21) வெள்ளிக்கிழமை மதுபானசாலைகள் மூடப்படுகின்றன.

இதேவேளை, புனித பூமி வலயங்களில் இரண்டு முதல் ஏழு நாட்கள் வரை மதுபான விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நாளை நாடு முழுவதும் அனைத்து மதுபானசாலைகளும் 06




## 05 ஆண்டுகளில் 58,304 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமைகள்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில், 2015 முதல் 2020 வரையிலான காலப்பகுதியில் 58,304 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை 06

## வவுனியாவில் நிலநடுக்கம் 2.3 ரிச்டர் அளவில் பதிவு

**ஜன்னல்கள், கதவுகள் அதிர்ந்ததாக தெரிவிப்பு**



வவுனியா, மதவாச்சி உள்ளிட்ட பல கிராமங்களில் நேற்று முன்தினம் (18) இரவு 11 மணியளவில் நில 06

## 1,700 ரூபாவை பெற்றுக் கொடுக்க கட்சி பேதமின்றி இணைய வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்



தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுக்க அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் ஜீவன் தொண்டமான் 06

## சாஹிரா கல்லூரி பரீட்சை பெறுபேறு சில தினங்களில் வெளியிடப்படும்



திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவர்களின் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும். அது தொடர்பான நடவடிக்கைகளை பரீட்சை ஆணையாளர் நாயகம் முன்னெடுத்து 06



# நகர்வலம்



### கர்நாடக மாநிலத்தில்

## குளிர்பானங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் முன்னாள் கிரிக்கெட் வீரர் முரளிதரன் முதலீடு

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முரளிதரன், கர்நாடகத்தில் உள்ள குளிர்பானங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் முதலீடு செய்யவுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் முத்தையா முரளிதரன், கர்நாடகத்தின் சாமராஜநகரா மாவட்டத்தில் உள்ள படனகுப்பேயில் குளிர்பானங்கள் மற்றும் தின்பண்டங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் ரூ.1,400 கோடி முதலீடு செய்யவுள்ளதாக கர்நாடக தொழில்துறை அமைச்சரும், எம்பியுமான பாட்டீல் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இந்தத் திட்டம் பற்றி அமைச்சர் பாட்டீலுடன் முத்தையா முரளிதரனுடன் கலந்துரையாடினார். இதுகுறித்து அமைச்சரின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முரளிதரன், "முத்தையா குளிர்பானங்கள் மற்றும் தின்பண்டங்கள்" (Muttiah Beverages and Confectioneries) என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பானங்கள் மற்றும் தின்பண்டங்களை தயாரிக்கும் நிறுவனம் அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும், முதலில் ரூ.230 கோடி முதலீட்டில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டம், தற்போது மொத்தம் ரூ.1,000 கோடியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் ரூ.1,400 கோடியாக அது உயர்த்தப்படும். இந்தத் திட்டத்திற்காக ஏற்கனவே 46 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், உற்பத்தி நடவடிக்கைகள் 2025ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்" அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முத்தையா முரளிதரன் எதிர்வரும் காலங்களில் தார்வாட்டில் மற்றொரு பிரிவையும் நிறுவத் திட்டமிட்டுள்ளதாக பாட்டீல் தெரிவித்தார்.



### ஐ.தே.க. புதிய மறுசீரமைப்பின் கீழ்

## பிராந்திய அமைப்பாளர்களுக்கு நியமனக்கடிதம் வழங்கல்




ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய மறுசீரமைப்பின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பிராந்திய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (18) சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஏறாவூர் வலய அமைப்பாளராக, அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பிலால் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் நேற்றுமுன்தினம் (18) ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஏறாவூரைச் சேர்ந்த பிலால் அபூபக்கர் தனது நியமனக் கடிதத்தை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.



தென்னிந்தியாவுக்கான இலங்கை துணை உயர்ஸ்தானிகர் டாக்டர் டி.வெங்கடேஷ்வரன், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான கே.பழனிசாமியை அண்மையில் அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

## கொழும்பு கலாசார அதிகார சபையின் பொசன் பக்திகீத இசை நிகழ்ச்சி

### கொழும்பு பிரதேச செயலகத்தில் இன்று 1 மணிக்கு

கலாசார திணைக்களத்தின் கீழ் இயங்கும் கொழும்பு கலாசார அதிகார சபை பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடத்தும் பக்திகீத இசை நிகழ்ச்சி கொழும்பு பிரதேச சபையின் பிரதேச செயலாளர் சந்தருவன் அநுருத்தவின் தலைமையில் கொழும்பு பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் திருமதி கிறிஸ்டி ரோஸியின் முன்னிலையில் இன்று 20ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு கொழும்பு பிரதேச செயலகத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய அனைத்து சமயங்களையும் சேர்ந்த கலைஞர்கள் இதில் ஒன்றாக இணைந்து நல்லிணக்க பக்திகீத இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு கலாசார அதிகார சபையின் தலைவர் கலைஞர்களான சந்த விஜேமான்ன, செயலாளர் திருமதி திமித்ரா இரத்னாயக்க, நிலு ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

## "கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம். ஆரிப் கல்விப் பணியும் சமூக சேவையும்" நூல் வெளியீட்டு விழா

**வெலிகம தினகரன் நிருபர்**



காலி மாவட்ட ஓய்வு நிலை கல்வியியலாளர் ஒன்றியத்தின் இரண்டாவது வெளியீடான "கீர்த்தி ஸ்ரீ ஏ.எம்.எம் ஆரிப் கல்விப் பணியும் சமூக சேவையும்" என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 23ம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு காலி கிந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

காலி கிந்தோட்டை ஸாஹிரா பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள இவ்விழா காலி மாவட்ட ஓய்வு நிலை கல்வியியலாளர் ஒன்றிய தலைவர் ஏ.எச்.எம் ஜிப்ரி தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக இலங்கை றுகுணு பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.கே.மொகமட் அலி கலந்து கொள்வதோடு கௌரவ அதிதிகளாக பட்டயக் கணக்காளர் எம்.என்.எம். நுளைப், பேருவளை அந் நஜீபாத் பெண்கள் அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேக் எம்.இஸட்.எம்.மஸீர் (அப்பாஸி) கிந்தோட்டை ஸாஹிரா முதல் பட்டதாரி எம்.எம்.எம்.முர்ஷித் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மேலும் விசேட அதிதிகளாக முன்னாள் கல்விப் பணிப்பாளர்கள், முன்னாள் அதிபர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்ச்சிகளை ஆசிரியர் எம்.எஸ்.எம்.ஹிஷாம் தொகுத்து வழங்கவுள்ளார்.

## சர்வமத தலைவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி வாழ்த்து

**கொழும்பு தினகரன் நிருபர்**

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர்களாக அண்மையில் நியமிக்கப்பட்ட சர்வமத தலைவர்களான வண. கலாநிதி சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அஷ்ஸெய்யித் அல்ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரி, அருட்தந்தை கலாநிதி நிஷான் குரே ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விஜேரம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது இனங்களுக்கிடையில் சகவாழ்வு இன, மத நல்லிணக்கத்தை மேற்கொள்வதில் 20வருடங்களுக்கும் மேலாக அக்கறையுடனும், முன்மாதிரியுடனும் செயலாற்றி வரும் சர்வமத தலைவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.



அத்துடன் புதிதாக கிடைத்த இப்பதவியினூடாக இலங்கையில் வாழும் மூவின மக்களுக்கிடையில் இன, மத நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை பலப்படுத்த இப்பதவி நல்லதோர் சந்தர்ப்பமாக உள்ளதெனவும் சர்வ மத தலைவர்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன, மத நல்லிணக்கத்திற்கான எதிர்கால வேலைத்திட்டங்களை சிறப்புடன் முன்னெடுத்து செல்ல சர்வமத தலைவர்களுக்கு, முன்னாள் ஜனாதிபதி தனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொண்டார்.



புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு கடந்த 17ஆம் திகதி துபாய் அல் அஸ்னா இன்டர்நேஷனல் கம்பெனியின் அனுசரணையில், ஸ்ரீ லங்கா ஐக்கிய முன்னணி கட்சியால் நாடளாவிய ரீதியில், உழ்ஹிய்யா வழங்கப்பட்டதாக ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தேசிய தலைவர் மௌலவி அஷ்ஷெய்க் எஸ்.எம்,சதீக் (முப்தி) தெரிவித்தார். ஸ்ரீ லங்கா ஐக்கிய முன்னணியின் கட்சியின் தேசிய தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக் (முப்தி) இனால் மன்னார் மாவட்டத்தில் உழ்ஹிய்யா வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.



2022ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஊழியர்களது பிள்ளைகளைப் பாராட்டி பரிசில்கள் வழங்கும் வைபவம், நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்தின் தலைமையில் நிறுவனத்தின் கேட்போர்கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். லேக் ஹவுஸ் நிறுவனத்தின் செயலாளர் சுதர்ஷி ஹேவாவசம், தினகரன் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றும் மொஹமட் றிம்ஸானின் புதல்வன் உமர் றிம்ஸானுக்கும் செயற்பாட்டுப் பணிப்பாளர் மஞ்சுள மஹாகும்புர ஏ சி பிரிவில் கடமையாற்றும் மொஹமட் றிஸ்வியின் புதல்வன் றிதாப்புக்கும் பரிசுகள் வழங்குவதை படங்களில் காணலாம்.

# வெற்றிகரமாக நிறைவுற்ற ஹஜ் கடமை

இவ்வருடத்துக்கான புனித ஹஜ் கடமை முடிவுக்கு வந்தது.

சவூதி உள்துறை அமைச்சின் அறிக்கையின் பிரகாரம் இவ்வருடம் 1,833,164 ஹாஜிகள் தமது ஹஜ் கடமையை நிறைவேற்றியுள்ளனர்.

அவர்களில் 1,611,310 பேர் சுமார் 160 நாடுகளில் இருந்து வருகை தந்த வெளிநாட்டு ஹாஜிகளாவர்.

2021, 2022 ஆகிய இரண்டு வருடங்களில் கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக ஹஜ் கடமையை நிறைவேற்றும் சந்தர்ப்பம், பெரியளவில் கிடைக்கவில்லை. ஆனால் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் கடந்த வருடமும் இவ்வருடமும் சவூதியின் பிரமாண்ட ஏற்பாடுகளுடன் எவ்வித குறையும் பிரச்சினைகளுமின்றி வெற்றிகரமாக நடைபெற்று முடிந்திருக்கின்றது ஹஜ்.

இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ்வருட ஹஜ்ஜுக்கான ஏற்பாடுகள், மிகச்சிறப்பாக செய்யப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. பல்வேறு நாடுகளில் இருந்தும் வருகை தந்த ஹாஜிகள் தமது ஹஜ் கடமையை, பாதுகாப்பாகவும் நிம்மதியான சூழலில் இலகுவாகவும் நிறைவேற்றுவதற்காக செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதார ரீதியான சேவைகள் பாராட்டுக்குரியவை.



சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை மொத்தம் 183 சுகாதார மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அவற்றுள் 32 மருத்துவமனைகள், 151 சுகாதார நிலையங்கள் மற்றும் 6 நடமாடும் கிளினிக்குகளும் அடங்குகின்றன. அதற்காக சுமார் 32 ஆயிரம் மருத்துவ மற்றும் நிர்வாக ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களுள் பல்வேறு துறைகளையும் சேர்ந்த ஐயாயிரம் மருத்துவர்கள் (consultant physician) ஹஜ் நடைபெறும் நாட்கள் முழுவதும் எந்த அவசர நிலைமைக்கும் உடனடியாக பதிலளிக்கும் வகையில் 24 மணிநேர சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

அதேநேரம் ஹாஜிகளின் வசதிகள் மற்றும் பாதுகாப்புக் கருதி உயர் தரத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு சேவையாக போக்குவரத்து சேவைகள் விளங்குகின்றன. உலகெங்கிலும் இருந்து வருகை தரும் ஹாஜிகளை வரவேற்பதற்காக அதின நவீன வசதிகளுடன் கூடிய 6 விமான நிலையங்கள் தயார்படுத்தப்பட்டன.

மினா, முஸ்தலிபா, அரபா ஆகிய புனிதத் தலங்களுக்கு ஹாஜிகள் இலகுவாக சென்று வர சுமார் 2000 அதிவேக ரயில் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. மட்டுமல்லாது இரண்டாயிரம் அம்பியுலன்ஸ்கள், 27 ஆயிரம் பஸ் வண்டிகள், ஐயாயிரம் டெக்ஸிகள் என்பன சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

அல் மஸ்ஜிதுல் ஹராம், அல் மஸ்ஜிதுன் நபவி ஆகிய இரு புனிதத் தலங்களிலும் சுமார் 14000 ஆயிரம் ஊழியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

அவர்களுடன் ஆயிரக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படையினர், சாரண இயக்கத்தினர், தொண்டர்கள் என பெருமளவிலானோர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். ஹாஜிகளுக்கான ஹஜ், உம்ரா வழிகாட்டல்களும், அவர்களது கேள்விகளுக்கான பதில்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் வழங்கப்பட்டன.

அத்துடன் மக்கா ஹரம் ஷரீபில் ஹாஜிகளுக்கான அறிவுரைகள், வழிகாட்டல்களைவழங்கரோபோ இயந்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அரபு, ஆங்கிலம், துருக்கி, உருது, பிரெஞ்ச் உட்பட 11 மொழிகளில் குறித்த ரோபோ இயந்திரம் சேவைகளை வழங்கியது குறிப்பிடத்தக்கது.



வயோதிபர்களினதும் மாற்றுத் திறனாளிகளினதும் பாவனைக்காக சுமார் பத்தாயிரம் மின்சார வண்டிகள் பாவனைக்கு விடப்பட்டன.

சுமார் 14 க்கும் அதிகமான ஸ்மார்ட் செயலிகளும் உருவாக்கப்பட்டிருந்தன.

அல் குர்ஆன், தண்ணீர் வைக்கப்பட்டிருக்கும் இடங்களை அடையாளப்படுத்தல், மின்சார வண்டிகளை முன்கூட்டியே பதிவு செய்தல் போன்ற சேவைகளை இதன் மூலமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

இவ்வளவு பாரிய ஏற்பாடுகளுடன் தான் இவ்வருட ஹஜ் கடமை வெற்றிகரமாக நிறைவுக்கு வந்துள்ளது.

இந்த உயரிய ஏற்பாடுகளுக்காக பலரும் சவூதியைப் பாராட்டிவருகின்றனர்.

அண்மையில் உலக சுகாதார அமைப்பின் அதிகாரியொருவரும் சவூதி அரேபியாவின் மகத்தான ஏற்பாடுகளுக்காக நன்றி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**அபூ அரீஜ் அர்ரியாழி**

# கல்முனை வடக்கு பிரதேச செயலக கோரிக்கையை நிராகரிக்கவில்லை

## அமைச்சின் செயலாளர் நேரில் சென்று தீர்வு காணவும் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பான கோரிக்கைகளை அரசு நிராகரிக்கவில்லை, இது தொடர்பில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழு அந்தப் பிரதேசத்திற்கு சென்று, கலந்துரையாடல்களை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமென, பிரதமர் தினேஸ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குறைநிரப்பு மதிப்பீட்டு தீர்மானம் மீதான விவாதத்தின் போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர், எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.



செல்வராசா கஜேந்திரன் எம்.பி அது தொடர்பில் தெரிவிக்கையில்,

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி கணக்காளர் ஒருவரை நியமிக்க கோரி அந்த பிரதேச மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் பிரதமருக்கும் ஆலோசனைக் குழுவுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதற்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. இதனால் மக்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடத்துகின்றனர். அதனைக் கவனத்திற் கொண்டு உடனடியாக அதற்கு தீர்வு காணுமாறு வலியுறுத்துகின்றோம் என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த சாணக்கியன் ராசமாணிக்கம் எம்.பி;

3 மாதங்களாக கல்முனை பிரதேச மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். இது குறித்து பிரதமரிடம் நாம் தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளோம். அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் வந்து அங்கு நிலைமைகளை கண்காணிப்பார் என்று பிரதமர் கூறினார். ஆனால், இன்னும் அவர் அங்கு வந்து கண்காணிப்பை மேற்கொள்ளவில்லை.

பிரதமர் உரிய பணிப்புரையை வழங்கியும் அரசாங்க அதிபர் அங்கு வரவில்லை. இதற்கான பிரதமரின் பதிலை நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரான தினேஸ் குணவர்தன;

இருவரும் கூறும் விடயம் உண்மையானதே.

இவர்கள் என்னை சந்தித்தனர். இது தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று கணக்காளர் ஒருவர் அங்கு நடமாடும் சேவையில் ஈடுபடுவதற்கும் அந்த செயலகத்தில் மக்களுக்கு தேவையான பணிகளை முன்னெடுக்கவும் மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதேபோன்று கல்முனையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நீதிமன்றத்தில் வழக்கொன்றும் உள்ளது.

இதன்படி அந்தப் பிரதேசத்தில் நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன.

அவற்றைக் கவனத்தில் கொண்டு நாம் கலந்துரையாடி அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். அமைச்சின் செயலாளர் கல்முனைக்கு சென்று கலந்துரையாடி பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பார்.

# வேதாந்தியின் சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா நாளை

**(ஏ.ஜீ.எம்.தௌபீக்)**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தவிசாளரும் முன்னாள் ஊடக பிரதியமைச்சருமான எம்.எச். ஷேகு இஸ்ஸதீனின் (வேதாந்தி) சிறு கதைகள் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் (21) வெள்ளிக்கிழமை இடம்பெறுகிறது. அக்கரைப்பற்று கடற்கரை வளாகத்தில் இவ்வெளியீட்டு விழா நடைபெறும். முஸ்லிம் தலைமைகள் பிரதம அதிதிகளாக பங்கேற்கும் இந்நிகழ்வில், கலை மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

சிறப்பு அதிதிகளாக பிராந்தியத்தின் இலக்கிய பிரபலங்கள் பங்கேற்கின்றனர். அரசியல், சமூகவியல், ஆத்மீகம் மற்றும் இலக்கிய துறைகளை உள்ளடக்கிய பல சிறுகதைகளை இந்நூல் சுமந்து வருகிறது.

இவ்விழா, சர்ஜூன் ஜமால்தீன் தலைமையில் இடம்பெறுகிறது.




# கிழக்கிலுள்ள விமான நிலையங்களை புனரமைத்து செயற்படுத்த வேண்டும்

## சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு இது வழிகோலும்

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரும் அரசாங்கமும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



சர்வதேச விமான நிலையத்திற்கும் கிழக்குக்கும் இடையிலான தொடர்புகளை அதிகரிக்கும் வகையில், கிழக்கிலுள்ள விமான நிலையங்கள் புனரமைக்கப்பட்டு இயக்கப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சுற்றுலாத்துறை, காணி அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்,

சுற்றுலாத் துறையை பொறுத்தவரையில் கிழக்கு மாகாணம் முக்கிய தளமாகத் திகழ்கிறது.

கிழக்கில் பல சுற்றுலா வலயங்கள் பெயரிடப்பட்டுள்ளன. இருந்தாலும் சர்வதேச விமான நிலையத்திலிருந்து அங்கு சுற்றுலாப் பயணிகள் வருவதில் பெரும் அசௌகரியங்கள் காணப்படுகின்றன.

சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஒரு மணித்தியாலம் அல்லது ஒன்றரை மணித்தியாலங்களில் கிழக்குக்கு அவர்கள் வரக் கூடிய நிலைமை உருவாக்கப்பட வேண்டும். இந்நிலைமையை உருவாக்க அங்குள்ள விமான நிலையங்கள் புனரமைக்கப்பட வேண்டும்.

அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் மூலம் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு சுற்றுலாத் துறையிலான ஈடுபாட்டை அதிகரிக்க முடியும். முதலீட்டாளர்களுக்கா

06

# பதிவு செய்யப்படாத 5,000 ஆயுர்வேத மருத்துவர்கள் சேவையில்

நாடு முழுவதும் பதிவு செய்யப்படாத சுமார் 5,000 ஆயுர்வேத வைத்தியர்கள் இருப்பதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இதேவேளை நாட்டில் பதிவு செய்யப்பட்ட 19,000 பாரம்பரிய வைத்தியர்களும், 4,500 பதிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆயுர்வேத வைத்தியர்களும், 3,000 டிப்ளோமா ஆயுர்வேத வைத்தியர்களும் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஒவ்வொரு வருடமும் ஆயுர்வேத திணைக்களம் மற்றும் ஆயுர்வேத வைத்திய சபைக்கு பதிவு செய்வதற்கு கிட்டத்தட்ட 1,000 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதாகவும் பாரம்பரிய வைத்திய முறையை முறைப்படுத்தும் வகையில், உள்ளூர் மருத்துவ அமைச்சு மற்றும் ஆயுர்வேத திணைக்களம் இணைந்து பாரம்பரிய வைத்தியர்களை பதிவு செய்யும் பணியை எதிர்வரும் 30 வரை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தினகரன் THINAKARAN தினகரன்

# 92 வருடங்களுக்கு முன் தினகரன்

**இன்று 20 ஜூன் 1932**


அகில இலங்கை சர்வகட்சி மகா நாடு

குடியேற்ற நாட்டந்தஸ்து

## அகில இலங்கை சர்வகட்சி மகா நாடு

**மகாத்மாகாந்தி இந்தியாவுக்கு விரும்பியதே இலங்கைக்கும் வேண்டும்**

### குடியேற்ற நாட்டந்தஸ்து

**இலங்கை தேசிய காங்கிரசும் லிபரல் சங்கத்தின் கோரிக்கைகளும்**

சுமார் 25 சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கூடிய அகில இலங்கை மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

இலங்கை கோருவது யாது? சுயராஜ்யமா? பூரண சுயராஜ்யமா? அல்லது குடியேற்ற நாட்டந்தஸ்தா? என்ற விஷயமாக பலர் பலவிதமான அபிப்பிராயங் கொண்டிருந்த போதும் லிபரல் கட்சியினர் கோரிய குடியேற்ற நாட்டந்தஸ்தே தற்போது போதுமானதெனச் சகலரும் ஏகமனதாக அபிப்பிராயந் தெரிவித்தனர்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**


**இலங்கை துறைமுக அதிகார சபை**

**கேள்வி அறிவித்தல்**

**அப்புறப்படுத்தப்படாத கப்பற் சரக்குகளின் விற்பனை**

**கேள்வித் திகதி: 2024-07-03**

**கேள்வி இலக்கம்: 457 மற்றும் 457A**

கொழும்புத் துறைமுக முற்றவெளிகள் மற்றும் பண்டகசாலையில் உள்ள பின்வரும் சரக்குகளை கொள்வனவு செய்து அகற்றுவதற்கான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

**கேள்வி இல. 457**

| | | |
|---|---|---|
| டைல் | Used Wood Planning | துணிகள் |
| பாக்கு | Compressors | EVA Foam Roll |
| எரிவாயு அடுப்புகள் | Cinnamon Quilling's | Polypropylene Moplen |
| கதவுகள் (Secondary Interior Doors) | Odorless Reclaimed Rubber | Solar & wind Power System |
| மண்ணெண்ணெய் அடுப்புகள் | மிதிவண்டிகள் | Ivory Board |
| டயர்கள் (Bra Dow Ice) | Security Tags and Handers | Ammonia Ice |
| விளையாட்டுப் பொருட்கள் | Odorless Reclaimed Rubber | மற்றும் ஏனைய வர்த்தகப் பொருட்கள் போன்றன |

**கேள்வி இல. 457-A**

| | | |
|---|---|---|
| மின்சார துணைப்பாகங்கள் | கண்ணாடிக் கதவு துணைப்பாகங்கள் | இரும்பு |
| Green Coffee | சமையலறை உபகரணங்கள் | ஆடைகள் |
| நூல் | நீர் பம்பிகள் | பாவிக்கப்பட்ட இயந்திரங்கள் |
| Lancet | Hamer Warrior Plus Roll Bar | துணிகள் |
| வாகன உதிரிப்பாகங்கள் | உணவுப் பொருட்கள் | மற்றும் ஏனைய வர்த்தகப் பொருட்கள் போன்றன |

457ஆம் இலக்க கேள்வியின் கேள்விப் பட்டியலுக்கு மீளளிக்கப்படாத 5000.00 ரூபா தொகை மற்றும் 457-A இலக்க கேள்வியின் கேள்விப் பட்டியலுக்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையைச் செலுத்தி கேள்விப் பட்டியலைப் பெற்றுக்கொள்ளலாம். 457ஆம் இலக்க கேள்விக்கு மீளளிக்கப்படும் 1,000,000.00 வைப்புத் தொகையையும் 457-A இலக்க கேள்விக்கு முன்வருவதானால் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபா, 200,000.00 ரூபா, 500,000.00 (நீங்கள் விண்ணப்பிக்கும் பெறுமதிக்கமைவாக) ரூபாவை வைப்புச் செய்தல் வேண்டும். (VAT மற்றும் SSCL சகிதம்). கேள்விப் படிவங்களை கெனல் முற்றவெளி, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின், விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2024-06-20ஆம் திகதி 10.00 மணித்தியாலம் முதல் 2024-07-01ஆம் திகதி 16.00 மணித்தியாலம் வரை வாரத்தின் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு (www.slpa.lk) இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**
**2024-06-20ஆம் திகதி,**
**இலங்கையைத் துறைமுக அதிகார சபை,**
**சேவை வழங்கல் பிரிவு,**
**இல. 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு -01.**

**தங்கக் கடன் பகிரங்க விற்பனை/ஏலம்**

ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தங்கக் கடன் மையங்களில் 30.04.2024 வரையிலான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், இது வரை மீட்டெடுக்கப்படவில்லை, 25.07.2024 அன்று விற்கப்படும்.

**தங்க கடன் நிலையங்கள்**

Arij City, சிலாபம், சிலாபம் Metro, கம்பஹா, ஹட்டன், ஹோமாகம, கல்முனை, கண்டி, களனி, குளியாப்பிட்டிய, குருநாகல், மாத்தறை, நீர்கொழும்பு, நுவரெலியா, பாணந்துறை, வென்னப்புவ

**திகதி, நேரம் மற்றும் விற்பனை நடைபெறும் இடம்**

திகதியும் நேரமும் : **25.07.2024 மு.ப 10.00 மணிக்கு**
இடம் : **ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்**
**இல. 69, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02**

பங்கேற்கும் அனைவரும் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தரவாத வைப்புத் தொகையை கொண்டு வர வேண்டும். ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்கும் உரிமையை கொண்டுள்ளது.

APFL Richard Pieris Finance
**ரிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிட்டெட்**
தொலைபேசி: 0714 368 997 / 0711 692 272

skills

**மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை**

அமானா வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் ஆவணமாக உத்தரவாதமாக வைக்கப்பட்டு 29.02.2024 அல்லது அதற்கு முன்பு மீட்கப்பட வேண்டியவையும், ஆனால் 31.05.2024 ஆம் திகதி வரை மீட்கப்படாமலிருப்பவையுமான அனைத்து தங்க ஆபரணங்களும் 29.06.2024, 30.06.2024 மற்றும் 07.07.2024ம் திகதிகளில் மு.ப 10.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை (கையிருப்பில் உள்ளவரை) செய்யப்படும்.

**ஏல விற்பனை நடைபெறும் இடம்**
அமானா வங்கி, தெமட்டகொடை கிளை
7, கென்ட் வீதி, தெமட்டகொடை கொழும்பு 09.

ஏல வளாகத்திற்குள் நுழையும் ஒவ்வொரு பங்கேற்பாளரும் ரூ5,000/- மீள் செலுத்தப்படாத நுழைவுக் கட்டணம் செலுத்த வேண்டும்.
ஏல விற்பனையை பிற்போடும் மற்றும் இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

Amãna Bank

பிரதம அதிகாரி - நுகர்வோர் நிதியுதவி
தனியாருக்கான வங்கியலுவால் பிரிவு
இல. 486, காலி வீதி, கொழும்பு 03.

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

**ஏல விற்பனை**

**இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு விற்பனை**
**ஏல விற்பனைத் திகதி - 2024.06.04**

**எனது இல.: LD/S/CICT/2024/06/PC-01**

கொழும்புத் துறைமுக பண்டாரநாயக்க உட்செல்லும் வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2024.06.24 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக CICT திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ள Fresh Onion ஐ அடக்கியுள்ள தடையகற்றப்படாத இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு அடைக்கப்பட்ட இரு (02) கொள்கலன்கள் மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

2024.06.20 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பெசேவ மற்றும் SSCL உடனான 1,000 ரூபாவையும் மீளளிக்கப்படும் கட்டணமான 200,000,00 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி 15 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனை ஆவணங்கள் மற்றும் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2024.06.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து மு.ப. 11.30 மணி வரையும் உரித்தான திறந்த வெளிகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

www.slpa.lk என்ற இணையத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
**20.06.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு - 01.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.06.18
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத்** — சீட்டிழுப்பு இலக்கம் 5508 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.32,334,376.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 7 7 8 6 5 4

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 083 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 8 6 5 4

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3750 — சீட்டிழுப்பு திகதி 2024.06.18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.61,895,596.76
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 24 51 66 72 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 48677

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1856 — 2024.06.18 — 68683 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.436,378,134.00
ஆங்கில எழுத்து S — சுப்பர் இலக்கம் 23 — வெற்றி இலக்கங்கள் 04 34 73 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7 VIP** — திகதி 2024.06.18 — சீட்டிழுப்பு இலக்கம் 0334
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 5 1 3 0 5 3 — L7 எழுத்து E
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ .31,513,732.20

**ராசி சுப பலன்** — திகதி 2024.06.18 — சீட்டிழுப்பு இலக்கம் 817 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,244,884.64
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 08 11 19 42 — தனயோக இலக்கம் 37990 — நாளுக்கான விதி எண் 02

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1538 — 2024.06.18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,043,804.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 10 27 28 50 — விசேட எழுத்து D — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 06855

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


குரோதி வருடம் ஆனி மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 13

## குறள் தரும் சிந்தனை



இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது

இனிய சொற்கள் இன்பத்தை வழங்கும் என்பதை உணர்ந்தவர் அதற்கு மாறாக எதற்காகக் கடுஞ் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்?

# ஜப்பானில் பதிவாகியுள்ள புதுவகை பக்றீரியா நோய்

ஜப்பானில் கண்டறியப்பட்டுள்ள புதுவித பக்றீரியா நோய் உலகின் கவனத்தை ஈத்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவின் வூஹான் மாகாணத்தில் தோற்றம் பெற்ற கொவிட் 19 பெருந்தொற்று முழு உலகிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. உலகில் 70 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களை கடந்த நாலாண்டு காலப்பகுதியில் காவு கொண்ட இவ்வைரஸ், 70 கோடியே 47 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களைப் பாதித்துள்ளது. இதன் தாக்கம் முதலிரு வருடங்களில் மிகவும் மோசமான கட்டத்தை அடைந்திருந்தது.

அந்த வைரஸின் தாக்கம், பாதிப்புக்கள் தற்போது கட்டுப்பாட்டு நிலையை அடைந்துள்ள போதிலும், அதன் பாதிப்புக்களின் வடுக்கள் மக்களின் மனங்களில் இருந்து இன்னும் அகலவில்லை. அதற்கிடையில் ஜப்பானில் இந்த புதிய பக்றீரியா தாக்கம் கண்டறியப்பட்டிருக்கிறது. அதுவும் மனித சதையை உண்ணக்கூடிய 'ஸ்ட்ரெப்டோகொக்கல் டொக்சிக் சின்ட்ரொம்' (Streptococcal toxic shock syndrome STSS) என்ற பெயர் கொண்ட அரிய வகை பக்றீரியா இது என்றும் கூறப்படுகிறது.

இதன் விளைவாக மற்றொரு உயிராபத்து அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கப் போகின்றோமா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது. ஏனெனில் கொவிட் 19 பெருந்தொற்றின் தாக்கமும் பாதிப்புக்களும் அந்தளவுக்கு நெருக்கடிகள் நிறைந்தவையாகக் காணப்பட்டதே இதற்கான காரணமாகும்.

ஆனால் இந்த பக்றீரியா இற்றைக்கு ஒன்றரை தசாப்தத்திற்கு முன்னர், அதாவது 1999 இல் ஜப்பானில் கண்டறியப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னரே உலகில் இப்பக்றீரியா உலகில் கண்டறியப்பட்டு இருப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தற்போது ஜப்பானில் இப்பக்றீரியா தொற்றினால் சுமார் ஆயிரம் பாதிக்கப்பட்டுள்ளனர். இது இவ்வருட இறுதியாகும் போது 2500 ஐ எட்ட முடியுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பின்புலத்தில்தான் இப்பக்றீரியா அதிக கவனத்திற்கு உள்ளாகக்கூடிய ஒன்றாக விளங்குகிறது. தகவல் தொடர்பாடல் துறையில் ஏற்பட்டுள்ள அபரிமித வளர்ச்சியும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இப்பக்றீரியாவானது, அதன் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கும் அவர்களது உணவு மற்றும் பானங்களைப் பகிர்ந்து கொள்பவர்களுக்கும் எளிதில் தொற்ற முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இப்பக்றீரியா தொற்றுக்கு உள்ளானவர்கள் மத்தியில் பல அறிகுறிகளை அவதானிக்க முடியும். அவற்றில் வீக்கம், தொண்டை வலி, மூட்டு வலி. காய்ச்சல், குறைந்த குருதி அழுத்தம், சுவாசப் பிரச்சினைகள், உறுப்பு செயலிழப்பு போன்றவாறானவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இத்தொற்று தொடர்பில் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொண்டால் இரண்டு நாட்களில் உயிரிழப்புக்கூட ஏற்படலாம் என்றும் ஜப்பானிய மருத்துவ அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனாலும் இந்த பக்றீரியா பெரும்பாலும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொற்றுவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் டோக்கியோ பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடப் பேராசிரியர் கென்கி குசி குறிப்பிடுகையில், ஒருவருக்கு இப் பக்றீரியா தொற்று ஏற்பட்டால் முதலில் காலில் வீக்கத்தை அவதானிக்கலாம். அது சில மணி நேரங்களில் முழங்கால் வரை விரிவடைய முடியும். இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தத் தவறினால் சுமார் 48 மணித்தியாலயங்களில் உயிரிழப்புக்கும் முகம்கொடுக்க நேரிடலாம்' என்றுள்ளார்.

இதன் ஊடாக இந்நோயின் பயங்கரத்தன்மை தெளிவாகிறது. அதனால் இப்பக்றீரியா தொற்று குறித்து கூடுதல் கவனம் செலுத்துவது மிக அவசியம்.

ஆன போதிலும் இது ஜப்பானில் பதிவாகியுள்ள நோயான போதிலும் வேறு நாடுகளில் பரவி இருப்பதற்கான பதிவுகள் இன்னும் இல்லாதுள்ளன. இந்நாட்டுக்குள் அவ்வாறான பக்றீரியா தொற்று வருவதைத் தவிர்ப்பதற்கான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் நாடு கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள இலங்கை மருத்துவர்கள், இப்பக்றீரியா குறித்து மக்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

ஆகவே ஆரோக்கியம் தொடர்பில் மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் குறித்து கூடுதல் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். இது ஒவ்வொருவருக்கும் பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும். அதன் ஊடாக ஏதாவது நோய் நிலைக்கு உள்ளானாலும் அவை குறித்து கண்டறிந்து உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# இன்றைய இளைய சமூகத்தினரை ஆக்கிரமித்துள்ள திறன்பேசிகள்!

அக்காலத்தில் மக்கள், மக்களோடு தொடர்பினை மேற்கொள்ளவும், மனித தேவைகளை இலகுவான முறையில் பூர்த்தி செய்யவும் கைக்குள் அடங்கும் வகையில் உருவாக்கப்பட்டவையே கையடக்கத் தொலைபேசிகள் ஆகும். ஆனால் இவை இன்று அபரிவிதமான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக திறன்பேசிகள் (Smart Phone) என்ற பெயரோடு சமூகத்தை அதன் கைக்குள் அடக்கி வைத்துள்ளன.

“கூவும் செல்போனின் நச்சரிப்பை அணைத்து கொஞ்சம் சில்வண்டின் உச்சரிப்பைக் கேட்போம்” என பல வருடங்களுக்கு முன்னர் வெளியான திரைப்படமொன்றின் பாடலில் அழகாக வரிகள் அமைத்திருக்கிறார் நா. முத்துக்குமார். முன்னைய சமூகத்தினர் ஏனையவருடன் பேசுவதற்காக மட்டுமே தொலைபேசிகளைப் பயன்படுத்தினர். ஆனால் இன்று குழந்தைக்கு சோறூட்டுவது முதல் பணத்தை வங்கியில் வைப்பு செய்வது வரை அனைத்தையும் செய்து விடுகின்றன இந்த திறன்பேசிகள்.

இலங்கையில் கொவிட்19 பரவலைத் தொடர்ந்தே இணையவழி கற்கை ஆரம்பமானது. இதனை அடிப்படையாக வைத்து அனைத்து மாணவர்கள் மத்தியிலும் திறன்பேசிகளின் பாவனை புழக்கமுறத் தொடங்கி விட்டது. ஆனால் இணையவழி கற்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் மாணவர்களால் திறன்பேசிகளின் பாவனையை குறைத்துக் கொள்ள முடியவில்லை என்றே கூற வேண்டியுள்ளது.

2011 ஆம் ஆண்டில் உலக சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின்படி 5 பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தினர். அதேவேளை நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலயங்கள் மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டும். ஆனால் இன்றைய சமூகத்தினர் 5 மணித்தியாலயங்களுக்கு மேல் பயன்படுத்துகின்றார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

சீனாவில் குழந்தைகள் நாளொன்றுக்கு 60 நிமிடங்கள் மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டும் என 2021 ல் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் நம் நாட்டில் குழந்தைகள்



முதல் முதியவர்கள் வரை நம்மில் எத்தனையோ பேர் இருபத்து நான்கு மணித்தியாலங்களும் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர்.

இலங்கையில் 2024 ஆம் ஆண்டு ஆய்வு முடிவில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60% சதவீதம் பேர் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென் மாகாணத்தில் உள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்திய குழுவொன்று ஆய்வொன்றை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திர ஸ்ரீ கூறியுள்ளார். இதில் பல சிறுவர்கள் இரவில் தூக்கமின்றி கவலையுடன் இருப்பதாகவும், இவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பதும் ஆய்வில் வெளிவந்துள்ளது.

மேலும் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ள சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களது உடல் சரியாக செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபடுவதாகவும் அதனை பெற்றோரால் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாகவும் ஆய்வு முடிவு கூறுகின்றது. அவசியமாக இருந்தால் மட்டும் பிள்ளைகளுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு குறைந்த அளவு கையடக்க தொலைபேசிகளை வழங்கும்படி வைத்தியக்குழு கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

திறன்பேசிகளால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை. ஆனால் 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பது போல இன்று அளவுக்கு மீறி திறன்பேசிகள் எனும் போதைக்கு அடிமையாகி விட்டார்கள். இன்றைய சமூகத்தினருக்கு உணவின்றியும் ஒரு நாள் இருந்து விடலாம், இன்டர்நெட் கார்ட் (Internet Card) இல்லாமல் வாழ முடியாதுள்ளது.

தேவையற்ற செயலிகளின் பதிவிறக்கம், காணொளிகள் பதிவிறக்கம், இணையவழி விளையாட்டுக்கள், போதைப்பொருள் பாவனை, தகாத உறவுகள், மனஅழுத்தங்கள், உடல் நோய்கள் இதனால் குடும்பங்களுக்கிடையே முரண்பாடுகள், சமூக சீரழிவுகள் என பல்வேறு சவால்களை ஏற்படுத்தி விடுகின்றன இந்த திறன்பேசிகளின் பாவனையைக் குறையுங்கள் என ஆலோசனை கூறப்பட்டாலும் இன்று அதிகரித்துக் கொண்டு செல்கின்ற வண்ணமே உள்ளது.

நமது முன்னைய தலைமுறையினர் நடக்க, பேச, பழக, சமைக்க, வாழ என பல்வேறு விடயங்களை சமூகத்திடமிருந்து கற்றுக்கொண்டார்கள். ஆனால் நம் தலைமுறையினர் இவை அனைத்தையும் இன்று திறன்பேசிகளிடமிருந்து கற்றுக் கொள்வதுடன், அவர்களுக்கும் சமூகத்திற்கும் தேவையற்ற விடயங்களையும் கற்றுக் கொண்டு சமூகத்திலிருந்து தனிமையாகி விடுகின்றார்கள். எந்தளவிற்கு நாம் கைபேசிகளுடன் நேரத்தை செலவிடுகின்றோமோ? அந்தளவுக்கு நாம் குடும்பத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் பிரிந்து செல்கின்றோம்.

சூழலோடும் சமூகத்தோடும் ஒன்றித்து வாழ்ந்தால்தான் சூழலில் இருந்து வரும் தாக்கங்களை எதிர்கொள்ளக் கூடியவனாக மனிதன் மாற முடியும்.

'கத்தி கொண்டு கனியையும் நறுக்கலாம், பிறர் உயிரையும் பறிக்கலாம்' என்பதுபோல எந்த ஒரு விடயமாக இருந்தாலும் நன்மையும் காணப்படும் அதேபோல தீமைகளும் காணப்படும். அதுபோலவே திறன்பேசிகளை நம் திறன்களை வளர்ப்பதற்கு பயன்படுத்துவோமாக இருந்தால் நாமும் சமூகத்தை சீர்படுத்தி சிறந்த பிரஜையாக பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ முடியும்.


தேவலிங்கம் நிலக்ஷனா
(நான்காம் வருடம், கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி)
கல்வி, பிள்ளைநலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்


# மாணவர்கள் தமது கையில் நூல் கட்டுவதை எவ்வாறு தடுக்க முடியும்?



பாடசாலை, கல்லூரி மாணவர்களிடையே சாதி, இன உணர்வுகள் காரணமாக உருவாகும் வன்முறைகளைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் ஏற்படுத்தவும், வழிமுறைகள் வகுக்கவும் ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் ஒருநபர் குழு அமைத்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, தமிழகத்தில் உள்ள பாடசாலை, கல்லூரிகளில் ஏற்படும் சாதி தொடர்பான வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பது குறித்து கருத்துத் தெரிவிக்க ஓய்வு பெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைக்கப்பட்டது. அதன் அடிப்படையில், ஓய்வுபெற்ற கே.சந்துரு தனது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை தயார் செய்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்றுமுன்தினம் சமர்பித்தார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

‘அரசுப் பள்ளிகளின் பெயர்களில் ஆதிதிராவிடர் நலத்துறை உட்பட எந்தச் சாதிய அடையாளங்களும் இருக்கக் கூடாது. தனியார் பள்ளிகளில் உள்ள சாதிப் பெயர்களை நீக்க வேண்டும்.

## தமிழகத்தில் இந்து மக்கள் குறிவைக்கப்படுவதாக பா.ஜ.க கண்டனம்!

குறிப்பிட்ட சாதி ஆதிக்கமாக உள்ள பகுதிகளில் அதே சமூகத்தைச் சேர்ந்தவர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கக் கூடாது.

கைகளில் வண்ணக் கயிறுகள், நெற்றித் திலகம் உள்ளிட்டவற்றுக்கு தடை விதிக்க வேண்டும். மாணவர்களின் வருகை பதிவேட்டில் எக்காரணம் கொண்டும் சாதிப்பெயர் இடம்பெறக் கூடாது. மாணவர்களின் சாதி விபரங்களை இரகசியமாக வைக்க வேண்டும்.’

இவ்வாறு அந்த பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் தெலுங்கானா முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், பா.ஜ.க நிர்வாகி எச்.ராஜா உள்ளிட்ட பா.ஜ.கவினர் நேற்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார்கள். அப்போது பேசிய எச்.ராஜா, “மாணவர்களின் கையில் கயிறு கட்டக்கூடாது என எப்படிச் சொல்லலாம்? ஒரு ஓய்வுபெற்ற நீதிபதி, இந்து மக்களை குறிவைத்து இது போன்று பரிந்துரை செய்துள்ளார்.

இதை ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு அவர் கொடுத்திருக்கிறார். இந்தப் பரிந்துரைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு. மேலும், இந்தப் பரிந்துரைகளை மாநில அரசு கண்டிப்பாக ஏற்கக் கூடாது” என்று பா.ஜ.கவினர் தெரிவித்தனர்.

# கற்பிட்டியில் நாளை ஹஜ் பெருநாள் சிறப்பு கவி அரங்கம்

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் முதல் நிகழ்வாக ஹஜ்ஜுப் பெருநாளை சிறப்பிக்கும் வகையில் கவி அரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'சரித்திரம் கண்ட தியாகத் திருநாள்' என்ற தலைப்பில் கற்பிட்டியின் மூத்த கவிஞர்கள் மற்றும் இளம் கவிஞர்கள், கவிதானிகள் என எட்டு பேர் கலந்து கொண்டு தமது கவி ஆற்றல்களை நாளை வெள்ளிக்கிழமை (21) பிற்பகல் 3 மணிக்கு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தம்பி நெய்னா மரைக்கார் கேட்போர் கூடத்தில் வெளிப்படுத்த உள்ளனர் .

இலங்கையின் தேசிய நாளிதழான தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் ஊடக அனுசரணையில் கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் தலைவரும் தில்லையூர்









பாடசாலையின் அதிபருமான எஸ்.எம். அருஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கவியரங்கில் மூத்த ஊடகவியலாளரும், எழுத்தாளருமான எம்.ஏ.எம் நிலாம் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றம் உருவாக்கப்பட்டு அதன் முதல் நிகழ்வாக இந்த கவியரங்கத்தை ஏற்பாடு செய்து கற்பிட்டியில் இலைமறைகாய்களாக இருக்கும் கவிஞர்களையும், ஆற்றல் மிக்க அல்அக்ஸா மாணவர்களையும் வெளிக்கொண்டுவரும் நிகழ்வாக இந்தக் கவியரங்கத்தை ஏற்பாடு செய்திருப்பதாக அதன் செயலாளர் எம்.எச்.எம். சியாஜ் தெரிவித்தார். இந்தக் கவிப்பெருவிழாவில் மன்றத்தின் உபதலைவர் எம்.எம்.எம். நவ்ப், உட்பட பிரதேச இலக்கியவாதிகள், பெற்றோர் என பெருமளவானோர் பங்கேற்கவிருக்கின்றனர்.

புத்தளம் மாவட்டத்தின் மிகச்சிறந்த இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் பலரையும் உள்வாங்கிய பிரதேசமாக கற்பிட்டி அமைந்துள்ளது. கற்பிட்டி மட்டுமன்றி திகளி, கண்டக்குளி, புளிச்சாக்குளம், குறிஞ்சிப்பிட்டி, காரைத்தீவு, பள்ளிவாசல்துறை உட்பட பல கிராமங்கள் 18ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் புலவர்கள் வாழ்ந்த பிரதேசங்களாகும். இக்காலகட்டத்திலும், பின்னரும் தர்காக்களை மையப்படுத்தி இஸ்லாமிய கலாசாரப் பாரம்பரியத்தை முன்னிறுத்தி புலவர்கள் பலநூறு இலக்கியப் படைப்புகளைத் தந்துள்ளனர்.

இவ்விலக்கியத்தினுள் புகழ்பாடும் கவிதைகள், கீர்த்தனைகள், நாட்டார் பாடல்கள், கும்மி, பதம்பாடுதல் என நிறையவே காணப்படுகின்றன. இவற்றில் சில காலத்தால் அழிந்து போனாலும் காலத்தால் அழியாத வாய்மொழிப் பாடல்களை இன்றளவும் காண முடிகிறது. இந்த விபரங்களை திரட்டி 'புத்தளம் பிரதேச புலவர்கள்' என்ற ஆய்வுநூலை பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் தந்துள்ளார்.

கவிதை, பாடல்கள் போன்ற இலக்கிய வடிவங்களுக்கு புத்துயிர் கொடுக்கும் கற்பிட்டி தமிழ் இலக்கிய மன்றம் முனைப்புடன் செயற்படத் தொடங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். இந்த முயற்சிகளுக்கு தேசிய நாளிதழான தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஆதரவளிக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சி தருவதாக இருப்பதாக மன்றத்தின் தலைவர், உபதலைவர், செயலாளர் மற்றும் அல்அக்ஸா தேசிய பாடசாலை சமூகம், பிரதேச மக்கள் நன்றியுடன் கூறுகின்றனர்.

இந்த தியாகத் திருநாள் கவியரங்கம் இனிதே வெற்றி பெற வாழ்த்துவோம்!




## தினகரன், வாரமஞ்சரி அனுசரணையில் விமரிசையான இலக்கிய நிகழ்வு


எம்.எச்.எம். சியாஜ்
செயலாளர்,
கற்பிட்டி தமிழ் இலக்கிய மன்றம்

# உத்தேச வாடகை வருமானச் சட்டம் அதிக வாடகை வருமானம் ஈட்டுவோருக்கு மாத்திரமே உரியதாகும்

உத்தேச வாடகை வருமானச் சட்டமானது அதிக வாடகை வருமானம் ஈட்டுவோருக்கு மாத்திரமானதாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஒவ்வொரு நபரினதும் முதல் சொத்து, இந்த வாடகை வரியிலிருந்து விடுவிக்கப்படும் அதேநேரம், சாதாரண வருமானம் ஈட்டும் மக்களிடத்தில் இந்த வரி அறவிடப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (18) பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையின்போதே இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய ஜனாதிபதி, பாலின சமத்துவச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு, பெண்களின் உரிமைகளுக்கும் பௌத்த மதத்தின் பாதுகாப்புக்கும் சவாலாகவும் பிரச்சினைக்குரியதாகவும் அமையும் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"சபாநாயகர் பாலினச் சமத்துவ சட்டம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபையில் அறிவித்தார். ஆனால் இது அரசியலமைப்பின் 4 ஆவது பிரிவின் கீழான இந்த சபையின் அதிகாரங்களை மீறுவதாகும். எனவே அதுகுறித்து ஆராய தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

மேலும், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு எதிரான கமலாவதி வழக்கில் தேசியக் கொள்கையை அமைச்சரவையின் அதிகார வரம்பிற்குள் மாத்திரம் பரிசீலித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. அது பாராளுமன்றத்தின் செயற்பாடாகும். இது அரசியல் விவகாரம். இதில் உயர்நீதிமன்றம் எந்த வகையிலும் தீர்ப்பளிக்க முடியாது. அவ்வாறு நடக்கும் பட்சத்தில் அவர்கள் பாராளுமன்றத்தின் அதிகார எல்லைக்குள் நுழைவதாக அமையும்.

இரண்டாவதாக, பெண்களின் சமத்துவம் மற்றும் சமூக அந்தஸ்து சார்ந்து ஏராளமான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நிரோஷன் அபேகோன் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு எதிரான ரத்நாயக்க தரங்க லக்மாலி வழக்கு விசாரணையில், மக்களின் கண்ணியம் மற்றும் நல்வாழ்வு அடிப்படை



**சமபாலின திருமணம் குறித்த விடயம் இந்தச் சட்டத்தில் இல்லை. பௌத்தமதப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, பெண்களின் உரிமையையும் பாதுகாக்கும் வகையில் தீர்வுகள் எட்டப்பட வேண்டும் – ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவிப்பு**

உரிமையாகும் என உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் பத்து நீதிபதிகள் கொண்ட குழுவின் முன்னிலையிலான சரத் ஜயசிங்க உள்ளிட்ட பல வழக்குகள் உள்ளன.

ஒரு அரசியலமைப்புத் திருத்தத்தின் பெறுமதியை அறிய, அதன் விளக்க உரைகளை மட்டும் நம்பியிருப்பது போதுமானதல்ல.

சமத்துவக் கொள்கையை நிர்வகிக்கும் அடிப்படைக் கோட்பாடு அநீதியை தடுப்பதாக அமையுமென நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க வழங்கிய, கருணாதிலக்க ஜெயலத் டி சில்வா வழக்குகளும் உள்ளன. அதனால் பாகுபாடு பாரபட்ச செயற்பாடுகளுக்கு கடுமையாக எதிர்ப்பு வெளியிடப்படுகிறது.

இறுதியாக, பிரதம நீதியரசர் வழங்கிய குற்றவியல் சட்டத் திருத்தம் தொடர்பான விசேட தீர்மானமும் புறக்கணிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில்தான் நாம் பெண்கள் வலுவூட்டல் மற்றும் பெண்களுக்கான சமத்துவம் பற்றிப் பேசுகிறோம்.

ஆனால் ஐந்தாவது நிலையான அபிவிருத்தி இலக்குகளின்படி சிறுபான்மையினரும் பாகுபாடு இன்றி அரச சேவைகளைப் பெறக்கூடிய இயலுமை இருக்க வேண்டும். அடிப்படை உரிமைகளின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் சாதாரண அதிகாரங்களுக்கமைய அவற்றை செயற்படுத்த வேண்டும்.

ஆனால் இந்தத் தீர்மானம் இந்த அதிகாரங்கள் எவற்றையும் கண்டுகொள்ளாத வகையில் அமைந்துள்ளது. ஒருபுறம் நீதிமன்றம் இவை எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு தங்களுக்கு இதற்கான அதிகாரம் இருப்பதாகக் கூறிவருகிறது. இதனால், முன்னைய தீர்ப்புகள் அனைத்தும் கேள்விக்குறியாகின்றன. நீதிமன்றம் வழங்கிய முந்திய தீர்ப்புகள் அனைத்தும் தூக்கி எறியப்பட்டுள்ளன என்றே கூற வேண்டும்.

எனவே இது நீதித்துறைக்கு கேடு விளைவிக்கும் செயலை செய்துவிட்டு அதனை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்வதைப்போல் உள்ளது. ஆனால் இந்த சபையில் அதைச் செய்ய முடியாது. பத்து நீதிபதிகள் கொண்ட குழுவையும் பிரதம நீதியரசரையும் மிஞ்சி அவர்கள் செயற்பட முடியுமா?

இந்தச் சட்டம் ஒரே பாலின திருமணம் மற்றும் பாலின சமத்துவத்தை அனுமதிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதற்கும் இந்த சட்டத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதற்கு இடமளிக்கவும் கூடாது. அனைத்து சட்டங்களிலும் காணப்படும் சாதாரண சரத்துக்கள் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளனர். அவற்றை நாம் உள்ளடக்கவில்லை.

சட்டமூலத்தை சட்டமா அதிபரே இறுதி செய்கிறார்.

அத்தோடு முழுமையாக பிரிவெனா கல்விச் சட்டத்தை இதனால் ஒதுக்கிவிட முடியும் என்று கூறப்படுகிறது. எந்த அடிப்படையில் இதைச் செய்தார்கள் என்று தெரியவில்லை. அரசியலமைப்பின் ஒன்பதாவது சரத்தில் பௌத்த மதத்தின் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அந்த சட்டத்தை தயாரித்து அதை நடைமுறைப்படுத்த பங்களிப்பு வழங்கிய அமைச்சர் என்ற முறையில் எனக்கு அதுபற்றி தெரியும். அந்தச் சட்டம் அரசியலமைப்பின் ஒன்பதாவது பிரிவு மூலம் பாதுகாக்கப்படுகிறது. இதைப் போன்ற ஒரு சிறிய ஏற்பாடு அதை மாற்றும் என்று நினைக்கிறீர்களா? அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில சொற்பதங்களை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் சிலர் விளங்கிக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

## சாதாரண வருமானம் ஈட்டுவோரிடம் இந்த வரி அறவிடப்பட மாட்டாது

இந்த சபைக்கு வருவதற்கு முன் தாங்கள் விகாரைக்கோ, பிரிவெனாவிற்கோ சென்று இதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். அங்கு என்ன நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். இந்த சபையில் மகாசங்கத்தினரும் உள்ளனர். எனவே அவர்கள் குறிப்பிட்டுள்ள இந்த உரிமைகள் மற்றும் பௌத்தர்களின் அனைத்து உரிமைகள் ஒரு சிறிய பகுதிகளை கொண்டு பறிக்கப்படலாம். என்ன நடக்கப் போகிறது? பௌத்த மதத்திற்கான அனைத்து பாதுகாப்புகளும் அகற்றப்படும்.

இறுதியாக, உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் 1972 அரசியலமைப்புச் சட்டத்தினை திரும்பிப் பார்க்க வேண்டும். எந்தவொரு அதிகாரமும் அரசியலமைப்புச் சபை மற்றும் அது கட்டமைக்கப்பட்ட 1972 அரசியலமைப்பின் மூலம் நியாயப்படுத்தப்பட வேண்டும். அதனால் சட்டம் குறித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்க முடியாது. அதன் பெறுமதி பற்றிய ஆலோசனைகளை மட்டுமே வழங்க முடியும்.

இது இந்த சபை அனுமதிக்கக் கூடாத சிக்கலான தீர்ப்பாகும். மேலும் இது குறித்து ஆராய ஒரு சிறப்புக் குழுவை நியமிக்குமாறு பரிந்துரைக்கிறேன். அதற்காக நீதிபதிகளை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இதை ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கலாம். அந்த தெரிவுக்கு அதிகளவில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களை நியமிக்க வேண்டும்.

இருப்பினும், இது பெண்கள் சார்ந்த விடயம். இதனால், இந்நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ள பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. மேலும், மற்றுமொரு பெரும்பான்மையாக உள்ள பௌத்தர்களின் பாதுகாப்பு அரசியலமைப்பின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. எனவே இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த சபை தனது உரிமைகளை உறுப்படுத்த வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். அடக்கம் செய்தல் மற்றும் கொவிட்19 தொற்றுநோயின்போது இடம்பெற்ற விடயங்கள் என்ன என்பது பற்றி நிறைய கலந்துரையாடல்களும் மனவேதனைகளும் ஏற்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். அந்த விடயத்தில் நானும் தலையிட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? முதலில், அனைத்து நாடுகளும் அடக்கம் செய்வதை நிறுத்தின.

அதன் பிறகு, உலக சுகாதார நிறுவனத்திடம் இந்த விடயம் முன்வைக்கப்பட்டது. ஆனாலும் இலங்கையில் நாங்கள் ஒரு குழுவை நியமித்தோம். துரதிர்ஷ்டவசமாக, நாங்கள் அடக்கம் செய்ய அனுமதிக்கக்கூடாது என்று குழு பரிந்துரைத்தது. உலக சுகாதார நிறுவனம் வேறுபட்ட கருத்தை எடுத்தது.

ஆனால் பின்னர் உயர்நீதிமன்றம் அந்தக் குழுவின் பரிந்துரையை உறுதி செய்தது. எனவே அதை அரசாங்கம் பின்பற்ற வேண்டியேற்பட்டது. அப்போது மாற்றுவழி இருக்கவில்லை. ஆனால் இப்போது அவை அனைத்தும் முடிந்துவிட்டன.

மேலும், இவை அனைத்தையும் நாம் எதிர்கொண்டோம். இந்த நாட்டில் அடக்கப்படுவதா அல்லது எரிக்கப்படுவதா என்பதை தீர்மானிக்கும் உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டும்.

எனவே, இறந்தவரின் உடலை புதைக்கவோ, தகனம் செய்யவோ அல்லது மருத்துவபீடத்திற்கு தானமாக வழங்கவோ உரிமை வழங்கும் சட்டத்தை இவ்விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கொண்டு வரவுள்ளார்.

இந்தக் காலக்கட்டத்தில், முக்கியமாக முஸ்லிம் மக்களுக்குப் மனரீதியிலான பாதிப்புகள் ஏற்பட்டன. ஆனால் எனக்கு தெரிந்த இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் இறந்த பிறகு அடக்கம் செய்வதை விரும்புகிறார்கள். எனவே நடந்ததற்கு அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். மேலும், இது தொடர்பாக முன்வைக்கப்படும் சட்டமூலத்திற்கு இந்தச் சபை ஆதரவளிக்கும் என்று நம்புகிறேன்.

மக்களின் இறையாண்மை பேணப்பட வேண்டும். அந்த இறையாண்மை பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதியிடம் உள்ளது. இந்த நேரத்தில் இரண்டு நிறுவனங்களும் ஒரே இடத்தில் உள்ளன. பாராளுமன்றத்தின் மூலம் நீதித்துறைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. அதைத்தான் 1971 தேர்தலில் முடிவு செய்தோம்.

கடந்த காலத்தைப் பற்றிப் பேச நான் இங்கு வரவில்லை. எனக்கு அது தேவையில்லை. ஆனால் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டபோது யார் கதைத்தார்கள் என்று தேவைப்பட்டால் என்னால் கூற முடியும். அதையெல்லாம் மறந்துவிட்டு நாம் கலந்துரையாடி முன்னோக்கிச் செல்லலாம். இங்கு அடிப்படைவாதம் தேவையில்லை.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# புனித ஹஜ் யாத்திரை வெற்றிகரமாக நிறைவு

சுமார் 2 மில்லியன் மக்கள் ஒரே இடத்தில் சகல வசதிகளுடன் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கான வசதிகளை சவுதி அரேபியா ஒவ்வொரு வருடமும் செய்து வருகிறது. இம்முறை அதிகளவு வெப்பநிலையிலும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மக்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்காத வகையில் ஹஜ் கடமை நிறைவுற்றது. ஆயிரக்கணக்கான தொண்டர்களையும் இப்பணியில் சவுதி அரேபியா இணைத்துக் கொண்டது.

பல மாதங்களாக பல செயலமர்வுகள்,



மாதிரிக் கண்காட்சிகள் போன்றவற்றை ஹஜ் மற்றும் உம்ராவுக்கான அமைச்சு நடத்தியது. பாதுகாப்புப் படைகளுக்கு ஹாஜிகளுடன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றி சவுதி அரேபிய அரசாங்கம் வழிகாட்டியது.

ஹாஜிகளுக்கு உச்சகட்ட வசதிகள் வழங்கப்பட்டதை கலந்துகொண்ட பலரும் சவுதி அரேபிய உத்தியோகபூர்வ ஊடகங்களுக்கு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். அவர்கள் அனைவரும் சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் ஆகியோருக்கும் தமது உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவித்தனர்.

சுமார் 3 இலட்சத்து 90ஆயிரம் ஹாஜிகள் சுகாதார வசதிகளைப் பெற்றதாகவும் 28 திறந்த இதய அறுவைச் சிகிச்சைகள், 720 இதய வடிகுழாய்கள் மற்றும் 1,169 டயாலிசிஸ்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சவுதி சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



இவ்வாறு 1445 ஹஜ் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இம்முறை ஹஜ் கடமை திருப்திகரமான முறையில் நிறைவுற்றது பற்றி கருத்துக்களை வெளியிட்டதுடன் மன்னரின் வழிகாட்டல்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துள்ளன. இலங்கையிலிருந்தும் சென்ற ஹாஜிகள் அவர்களுடைய கடமைகளை பூரணமாக சகல வசதிகளுடனும் நிறைவேற்றியுள்ளனர். ஹாஜிகளுக்கு பணி செய்வது தமக்கு சிறப்பு எனவும் அவர்கள் அல்லாஹ்வின் விருந்தாளிகள் எனவும் சுலோகங்கள் நகரெங்கும் காணப்படுகின்றன.

ஹாஜிகளின் ஆரோக்கியம் கருதி உணவகங்களுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நோய் காரணமாக தமது கடமைகளை செய்ய முடியாதவர்களை விமானங்கள் மற்றும் அம்புலன்ஸ் மூலம் அரபாவில் இருக்கும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



சுமார் 2 மில்லியன் மக்களை சகல வசதிகளுடன் சுமார் 3 வாரங்கள் அல்லது ஒரு மாதம் மற்றும் சிலர் இரண்டு மாதங்கள் பராமரிப்பு செய்வதென்பது இலகுவான காரியமல்ல. பல நாட்டுத் தலைவர்கள், பல நாட்டுப் பிரதமர்கள், பிரமுகர்கள் அரச அதிகாரிகள், கல்வியாளர்கள், பொது மக்கள் என்று அனைவருக்கும் உச்ச பாதுகாப்பு வழங்கி அவர்களை வரவேற்று சேவைகளை வழங்குவதில் சவுதி அரேபியாவின் சேவைகள் யாராலும் மறுக்க முடியாதவை.

250 ஆயிரம் பாதுகாப்பு வீரர்கள், 40 ஆயிரம் தொண்டர்கள் மற்றும் ஓட்டுநர்கள், 29 ஆயிரம் சுகாதாரப் பயிற்சியாளர்கள், 53 ஆயிரம் பொறியாளர்கள், ஊழியர்கள், 2,500 துணை மருத்துவர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். 264 அம்புலன்ஸ் மையங்கள், 189 மருத்துவமனைகள், சுகாதார மையங்கள், 203 நடமாடும் குழுக்கள், 35 ஆயிரம் பேருந்துகளும் ஆயத்தநிலையில் வைக்கப்பட்டிருந்தன.

மௌலவி பௌஸுல் அலவி

# ஹோமாகம முதல்தர தபால் நிலையம் அமைச்சர் பந்துலவினால் திறப்பு



தபால் திணைக்களத்தின் நிதியின் புனரமைக்கப்பட்ட ஹோமாகம முதல்தர தபால் நிலையம் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விரைவு அஞ்சல் சேவை (EMS) மத்திய நிலையம் மற்றும் பண விநியோக (COD) மத்திய நிலையம் ஆகியவற்றை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன திறந்து வைத்தார்.

இலங்கையில் எந்தவொரு இடத்துக்கும் குறைந்த கட்டணத்தில் கடிதங்கள் மற்றும் பொதிகளை விநியோகம் செய்யும் சேவை, பொருளின் எடைக்கு மட்டும் கட்டணம் வசூலிப்பது, ஒன்லைன் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்களுக்கு அதிக வசதிகளை அளித்து, ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான வணிக மதிப்புள்ள பொருட்களை நவீன தொழிநுட்ப முறைகளுக்கு ஏற்ப பொருட்களை பெற்றுக்கொண்ட பின்னர் பணம் செலுத்தும் முறை போன்ற மேம்படுத்தப்பட்ட பல நவீனமயப்படுத்தப்பட்ட சேவைகளை ஹோமாகம புதிய தபால் நிலையத்தினூடாக பெற்றுக் கொள்ளும் வசதிசெய்யப்பட்டுள்ளது.

தபால் நிலைய வளாகத்தை திறந்து வைத்த அமைச்சர் cash on Delivery சேவை கருமபீடத்தையும் திறந்து வைத்தார். ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட, தபால் மாஅதிபர் ருவன் சத்குமார, ஹோமாகம பிரதேச செயலாளர் பி.ஏ.டி. சிந்தக, தபால் திணைக்களத்தின் செயற்பாட்டு தலைவர் பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க, ஊடகத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர்கள், தபால் திணைக்கள அதிகாரிகள், உள்ளூராட்சி அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இன்றைய பலன்கள்

(20.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** கூட்டுத் தொழிலில் திருப்பம் ஏற்படக் கூடும். கூட்டாளிகளில் ஒருவர் வேறு தொழில் செய்ய விலகிச் செல்லலாம்.

**ரிஷபம் :** மூலதனத்தை பெருக்க முயற்சி செய்வீர்கள். குடும்பத்தில் பொருள் வரவும் மகிழ்ச்சி அளிக்கும். உறவினர் ஒருவரின் குடும்ப நிகழ்விற்கு பொருள் உதவி செய்வீர்கள்.

**மிதுனம்:** சொந்த தொழில் செய்பவர் வியாபாரத்தை பெருக்க முயற்சி மேற்கொள்வீர்கள். கூட்டுத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் இருந்தாலும் அதிகமான சிரமங்களையும் சந்திக்க நேரிடும்.

**கடகம்:** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு நிலுவைத் தொகைகள் வசூல் ஆகும். புதிய வாடிக்கையாளர்கள் வருகையால் பொருளாதாரம் உயரும்.

**சிம்மம்:** பல நாட்களாக வராமல் இருந்த தொகை வந்தடையும். கூட்டுத் தொழிலில் எதிர்பார்க்க லாபம் இருக்கும்.

**கன்னி:** எதிர்பார்த்த திருப்பங்கள் நல்ல முறையில் இருக்கும். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் தலை காட்டினாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள்.

**துலாம்:** கூட்டாளிகள் ஒற்றுமையில் விரிசல் உருவாகலாம். எனவே கவனமாக இருங்கள். குடும்பத்தில் பழைய கடன்களால் தொல்லை ஏற்பட்டாலும் பெரிய பாதிப்பு வராது.

**விருச்சிகம்:** வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்ய முயற்சிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் கருத்து வேறுபாடுகளால் வியாபாரம் பாதிப்படையலாம்.

**தனுசு:** புதிய நபர்களின் அறிமுகம் நல்ல திருப்பத்தை தரும். கூட்டுத் தொழில் செய்பவருக்கு எதிர்பார்த்த கடன் பாக்கிகள் கிடைக்காது.

**மகரம்:** குடும்பத்தில் ஒற்றுமை இருக்கும். சிறு சிறு பிரச்சினைகளை திறமையாக சமாளித்து விடுவீர்கள்.

**கும்பம்:** கூட்டுத் தொழிலில் முதலீட்டை அதிகரிக்க ஆலோசனை மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளை சமாளிப்பீர்கள்.

**மீனம்:** சொந்தத் தொழிலில் கணிசமான லாபம் பெறுவீர்கள். புதிய நபர்களின் தொடர்பால் தொழிலில் உற்சாகம் உண்டு.

## கைத்தொழில் துறைக்கு நிதியுதவி...

தெரிவித்தார். 'நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளின் போதும், சிலர் நீதிமன்றத்தை நாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் எனவும் இவ்வாறு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும், தேசிய கொள்கையின் ஊடாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் முதன்முறையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள (இன்டர்நெசனல் இன்டஸ்ரியல் எக்ஸ்போ 2024) சர்வதேச கைத்தொழில் கண்காட்சி 2024 நேற்று (19) ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவின் ஆலோசனையின் பேரில், கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சி, நேற்று ஆரம்பமாகி 23 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச தொழில் முனைவோர் மற்றும் உள்ளூர் பாரிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறையினர் இதில் பங்கேற்கின்றனர். 1,307 கண்காட்சிக் கூடங்களை உள்ளடக்கிய இக்கண்காட்சியில் பசுமை தொழில்துறை வளாகம் தனி வலயமாக சேர்க்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இந்த கண்காட்சிக்கு இணைந்ததாக பசுமை தொழில்மயமாக்கல் குறித்து நிபுணத்துவ மாநாடும் நடைபெறும்.

"சர்வதேச கைத்தொழில் எக்ஸ்போ 2024" கண்காட்சியை திறந்து வைத்த ஜனாதிபதி, கண்காட்சியையும் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வின் போது Ceylon Plaza கணினி மென்பொருள், சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு: ''இந்நாட்டின் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரன விசேட கவனம் செலுத்தி செயற்பட்டு வருகின்றார். அதன் ஒரு கட்டமாக இந்த தொழில் கண்காட்சியைக் குறிப்பிடலாம். இது நாட்டிலே நடத்தப்படும் மிகப்பெரிய கண்காட்சியாகும். கடந்த காலத்தில் நமது நாடு வங்குரோத்தடைந்த நாடாக மாறியிருந்தது. ஆனால் அடுத்த சில வாரங்களில் நாம் வங்குரோத்தடைந்த நாடு என்ற அவப்பெயரிலிருந்து முற்றிலும் விடுபடுவோம். இது தொடர்பான ஒப்பந்தமும் அடுத்த சில வாரங்களில் எட்டப்பட உள்ளது. இதன்மூலம், தனியார் கடனாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எளிதாகிறது. எனவே இந்த பணியை இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்வோம்.

ஆனால் இதில் மட்டும் திருப்தி அடைய முடியாது. இந்தக் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். பல வருடங்களுக்கு முன்னர் பெற்ற கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கு 2042 வரை கால அவகாசம் கிடைக்குமென நம்புகிறேன். இறக்குமதிப் பொருளாதாரம் காணப்படுவதால் இறக்குமதிக்கு பணம் கொடுக்க வேண்டும். அதற்கான அந்நியச் செலாவணி நம்மிடம் இல்லை. அதனால் அவர்கள் மீண்டும் கடன் வாங்க வேண்டும். இந்த முறை அமுல்படுத்தப்பட்டால் இன்னும் 1520 ஆண்டுகளில் மீண்டும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே, ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் நோக்கில் செயல்பட்டு வருகிறோம்.

ஏற்றுமதிப் பொருளாதாரத்துக்கு மாறுவதில், உற்பத்திப் பொருளாதாரம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. உருவாக்கப்படும் பொருளாதாரம் போட்டித்தன்மையுடன் டிஜிட்டல் பொருளாதாரமாகவும் இருக்க வேண்டும். மேலும், பூஜ்ஜிய காபன் உமிழ்வு என்ற இலக்கை நோக்கி நகர்வதில் பசுமைப் பொருளாதாரமாக மாற்ற வேண்டும். இந்த கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும்.

முதல் பணியாக, அந்தத் திட்டங்களின் படி தற்போதுள்ள தொழில்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஒரே இரவில் யாராலும் போட்டித்தன்மையை உருவாக்க முடியாது. நமது அண்டை நாடான இந்தியா தற்போது பெரும் கைத்தொழில் துறையில் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் இதே வளர்ச்சியைக் கண்டுள்ளன. நாமும் அதனுடன் இணைந்திருக்க வேண்டும். மேலும் இந்த விஷயத்தில் உலகின் மற்ற நாடுகளுடன் இணைந்து செயல்படுவோம் என்று நம்புகிறோம். எனவே, முதலில் செய்ய வேண்டியது தொழில்களை போட்டி நிலைக்கு கொண்டு வர வேண்டும். அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்குத் தேவையான நிதியை வழங்க அபிவிருத்தி வங்கி ஒன்றை நிறுவுவது குறித்து ஆலோசிக்கிறோம். 1960 இல் எம்மிடம் DFCC வங்கி இருந்தது. 1980 இல், NDB வங்கி நிறுவப்பட்டது. தனியார்மயமாக்கலுக்குப் பிறகு, இந்த இரண்டு வங்கிகளும் நம் நாட்டில் பெரிய வணிக வங்கிகளாக மாறிவிட்டன. குறிப்பாக இந்த வங்கிகள் அப்போது இல்லாவிட்டால் மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத் திட்டம் வெற்றியடைந்திருக்காது. எனவே, புதிய வங்கியொன்றை தொடங்க எதிர்பார்க்கிறோம்.

அதற்குள் வட்டி விகிதத்தை குறைந்த மட்டத்தில் பேண வேண்டும். மேலும், இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல பொருளாதார ஆணைக்குவொன்றும் ஸ்தாபிக்கப்படும். மற்ற நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்காக "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" என்ற புதிய அமைப்பை ஸ்தாபிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவன அமைப்பு இந்த நாட்டில் உள்ள அனைத்து தொழிலதிபர்களுக்காக உருவாக்கப்பட்டது. அடுத்த 5 10 ஆண்டுகளில், இதே வழியில் நாம் முன்னேற வேண்டும். பங்களாதேஷ், மியான்மர் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு உற்பத்தியை மேற்கொள்ள விரும்பினால், எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்பைப் பெறலாம். இதுவே எமது கொள்கை. இந்த செயற்பாடுகளின் போது, இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடியுள்ளேன். அதேபோல், நாளைய தினம் இந்திய வெளிவிவகார அமைச்சருடனும் கலந்தாலோசிக்கவுள்ளோம்.

நாட்டில் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கும், பசுமை ஹைட்ரஜனைப் பெறுவதற்கும் இந்தியா ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வடக்கு கடல் பரப்பைக் கொண்டு அந்த நன்மையை அடையவோம். அதன் முதல் படியாக அதானி இலங்கை வந்தார். இதுபோன்று புதிய பாதையில் நாம் பயணிக்க வேண்டும்.

நாட்டில் சிலர் ஒவ்வொரு விடயத்துக்காவும் நீதிமன்றம் செல்கின்றனர். அதனால் சட்டத்தரணிகள் மட்டுமே பயன் பெறுவார்கள். நீதிமன்றத்திற்கு செல்வதால் மட்டும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. எமது தேசிய கொள்கையின் படி நாம் முன்னேற வேண்டும். இத்தொழில்களின் முன்னேற்றத்துக்காக புதிய வேலைத்திட்டம் ஒன்றை கலந்துரையாடி தயாரிக்குமாறு தொழில் அமைச்சருக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன். அந்த செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் பொருளாதார மாற்ற சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கிறோம்" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## கிழக்கிலுள்ள விமான.... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புக்களை அதிகரிக்கவும் அங்குள்ள இளைஞர்களை இலகுவாக வேலை வாய்ப்புக்களில் ஈடுபடுத்தவும் இது,வழியேற்படுத்தும்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டின் சுற்றுலாத்துறை பெரும் வீழ்ச்சியடைந்தது. தற்போது இத்துறை வழமை நிலைமைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றது. நான்கு மதங்களை பின்பற்றும் மக்கள் கிழக்கில் உள்ளனர்.இவர்கள் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளையே பேசுகின்றனர்.இம்மக்களின்கலை, கலாசார அம்சங்களை அறிந்து கொள்வதற்காக கிராமப் பகுதிகளுக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். யுத்தத்தின் பின்னர் கிழக்கில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் சுற்றுலா வலய பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவைகள் காணப்படுகின்றன.

## ரூ. 9,622 மில்.செலவில் 97 பிரதேச செயலக...

இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ்.சத்தியானந்த,

''நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் முக்கிய துறைகள் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள் ஆகும். 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள், யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு 1,51,662 வீடுகளை எமது அமைச்சு நிர்மாணித்துள்ளது.

உள்நாட்டு நிதிக்கு மேலதிகமாக, இந்திய உதவிகள், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இதன்படி, யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களின் வீட்டுத் தேவைகளில் 89% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மொத்தமான மீள்குடியேற்ற வேலைத் திட்டத்தின்படி, இதுவரை மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 2,75,127 ஆகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு, மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதற்காக 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி இந்த ஆண்டு, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் மற்றும் வீடுகளுக்கான மின்சார இணைப்புகள் வழங்கப்படும்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுநீரக நோயின் நிலைமையைக் கருத்தில் கொண்டு 50 நனோ நீர் சுத்திகரிப்பு பிரிவுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நாட்டை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றும் பொறுப்பு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கே உள்ளது.

23 மார்ச் 2028 ஆம் ஆண்டுக்குள், இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்ற அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதன்படி, வடக்கு மற்றும் கிழக்கில் 131,969 சதுர கிலோமீற்றர் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன், 25.09 சதுர கிலோமீற்றர் நிலக் கண்ணிவெடிகளே அகற்றப்படவேண்டி உள்ளன. அதற்காக இந்த வருடம் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, பல சிறப்புத் திட்டங்கள் நமது அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றன. மேல் மாகாண பெருநகர பிரதான திட்டம், கிழக்கு மாகாண மூலோபாய சுற்றுலா வலய அபிவிருத்திக்கான பிரதான திட்டம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் பிரதான அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தி நகர அபிவிருத்தித் திட்டம், கொழும்பு நகர புத்துயிர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் திட்டம் மற்றும் அனுராதபுர ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டம் ஆகியவை இத்திட்டங்களில் அடங்கும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றில், ஜனாதிபதியின் விசேட கவனத்தைப் பெற்ற “கந்துகர தசகய” விசேட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக இவ்வருடம் பத்தாயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம், 97 பிரதேச செயலகப் பிரிவுகளில் 14,088 வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டங்களுக்காக 9,622 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளது.'' என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ்.சத்தியானந்த தெரிவித்தார்.

## தபால் முத்திரை விலையை...

2022 வரை 15 ரூபாவாக இருந்த முத்திரையின் குறைந்தபட்ச விலை தற்போது 50 ரூபாவாக உள்ளது. தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நஷ்டம் அடைந்து வருவதால் இந்த தீர்மானத்தை எடுக்க நேரிட்டதாக அனுஷ பல்பிட்ட மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்திய வெளிநாட்டமைச்சர்...

உறுதிப்படுத்தியுள்ளது. இவ்விஜயத்தின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இலங்கைக்கு வருகை தரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது தூதுக்குழுவினர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் ஜெய்சங்கருடன் இந்திய வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் வருகை தரவுள்ளதாகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்துக்கு முன்னதாக, இரு நாடுகளுக்குமிடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களை மீளாய்வு செய்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விஜயத்தின் பின்னர், இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களூடாக...

தெரிவித்தார். இந்த அமைச்சை கடந்த வருடத்தில் தாம், பொறுப்பேற்றது முதல் இதுவரை வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களிடமிருந்து நாட்டுக்கு 11.3 மில்லியன் ரூபா நாட்டுக்கு அந்நியச் செலாவணியாக கிடைத்ததாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், ரத்னசேகர எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊடாக தென்கொரியா, ஜப்பான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு இலங்கையர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு தனியார் முகவர் நிறுவனத்தின் மூலமும் சவூதி அரேபியா, குவைத், ஜோர்தான்,சிங்கப்பூர், ஜப்பான், ஐக்கிய ராஜ்யம், சைப்பிரஸ், மலேசியா, மாலை தீவு, தென்கொரியா, ருமேனியா, சேர்பியா உள்ளிட்ட நாடுகளுக்கும் இலங்கையர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் மூலம் நாட்டுக்கு 5,970 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் கிடைத்துள்ளன. நாம், கடந்த வருடத்தில் மேற்படி அமைச்சை பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 11.3 மில்லியன் ரூபா நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சில தரப்பினர் நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம் என கூறியபோதும், எமது மக்கள் பணம் அனுப்பியுள்ளனர் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கடற்றொழில் அமைச்சின் புதிய...

சோமரத்ன ஓய்வு பெற்றதை தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளராக இவர,கடமையாற்றியுள்ளதுடன் தெஹியோவிட்ட மற்றும் பசறை பிரதேச சபைகளில் உதவி பிரதேச செயலாளராகவும், பதுளை மாவட்ட சமுர்த்தி ஆணையாளராகவும், ஊவாபரணகம பிதேச சபையின் செயலாளராகவும், ஊவா மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளராகவும், அம்மாகாண சபையின் ஆணையாளராகவும் தெங்கு, அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாகவும், இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமாகவும், காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வர்த்தகப் பிரிவின் விசேட பட்டதாரியான இவர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் எம்.ஏ. பட்டதாரியுமாவர். சர்வ மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற இந் நிகழ்வில், அமைச்சின் மேலதிக செயலாளர்களான அனுஷா கோகுல (மனித வள அபிவிருத்தி), அப்சரா நிசங்க(நிர்வாகம்), பணிப்பாளர் (நாயகம் தொழில்நுடபம்) தம்மிக்க ரணதுங்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கே. அருளானந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பொசன் பௌர்ணமி தினத்தன்று...

மூடப்படுவதோடு, தம்புள்ளை மற்றும் திஸ்ஸமஹாராம நகர சபைக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பொசன் பண்டிகை வலயங்களில் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 22 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களுக்கு மூடப்படுமென கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

## சாஹிரா கல்லூரி பரீட்சை பெறுபேறு...

வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (19) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய இடையீட்டு கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் தனது கேள்வியின்போது, திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகள் 70 பேரின் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இடை நிறுத்தப்பட்டிருக்கிறது. பரீட்சை பெறுபேறுகள் ஒரு வாரகாலத்துக்குள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என இந்த சபையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தீர்கள். ஆனால் இதுவரை பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. அதனால் அந்த மாணவிகளுக்கு அநீதி ஏற்படாமல் அவர்களின் பெறுபேறுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## வவுனியாவில் நிலநடுக்கம்...

அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வவுனியா மற்றும் மதவாச்சியின் பல கிராமங்களில் 2.3 மெக்னிடியூட் அளவில் நில அதிர்வு ஏற்பட்டதாக புவிச்சரிதவியல், நில அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. அந்த அதிர்வினால் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் தங்களது வீடுகளில் ஜன்னல்கள், கதவுகள் சில நொடிகள் பலத்த சத்தத்துடன் அதிர்ந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர். வாழ்க்கையில் முதன் முறையாக இதுபோன்ற அனுபவத்தை தாம், உணர்ந்ததாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பெரியளவில் அதிர்வுகளை உருவாக்காத மெல்லிய அதிர்வாகவே இதைக் கருத வேண்டியுள்ளதாக சர்வதேச நில அதிர்வுகளை ஆராய்ந்து பதிவிடும் மையமான Volcana Discovery தெரிவிக்கிறது.

## 1,700 ரூபாவை பெற்றுக் கொடுக்க...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 1,700 ரூபா சம்பளத்தை வழங்க வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ள போதும் தோட்டக் கம்பனிகள் இதுவரை அதனை வழங்க மறுத்து வருகின்றன என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைவரும் இணைந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது அவசியமென்றும் அவர் தெரிவித்தார்.

1,700 ரூபா சம்பளம் என்பது எந்த வகையிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு போதுமானதென நான் கூறவில்லை. அதையாவது பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்த அமைச்சர், தற்போது வழங்கப்படும் ஆயிரம் ரூபா சம்பளம் 2020 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. அது சுமார் ஏழு டொலர்கள் ஆகும். அந்த சம்பளமே இன்றும் வழங்கப்படுவது என்பது எத்தகைய அநீதியாகும் என்றும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதை வேளை, அண்மையில் தோட்டம் ஒன்றில் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், அதில் தொழிலாளர்களின் சார்பாக தாம், சம்பந்தப்பட்டுள்ளதால், சில ஊடகங்கள் அந்த செய்திகளை திரிபு படுத்தி வெளியிட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் அந்தத் தவறு நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

அதை வேளை, தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழிலாளர்களை கைது செய்யும் அதிகாரம் பொலிசாருக்கு கிடையாது என்றும் அந்த வகையில் தோட்ட முகாமைத்துவம் பாரிய அநீதியை இழைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 05 ஆண்டுகளில் 58,304 பேருக்கு...

வழங்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இக்காலப்பகுதியில் இரட்டை பிரஜாவுரிமைக்காக 63,917 பேர் விண்ணப்பித்ததாகவும் இவர்களில் 58,304 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

# எம்பிலிப்பிட்டி பெரிய ஆஸ்பத்திரியில் இருதய நோய் தீவிர சிகிச்சை பிரிவு; வர்த்தகர் உதவி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

எம்பிலிப்பிட்டி பெரிய ஆஸ்பத்திரிக்கு தேவைப்பாடாக இருந்த இருதய நோய் பிரிவு மற்றும் இருதய நோய் தீவிர சிகிச்சை பிரிவை எம்பிலிப்பிட்டி பிரதேசத்தின் பிரபல வர்த்தகரான சேனக சரச்சந்திர ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

மேற்படி ஆஸ்பத்திரிக்கு தனது சொந்த நிதியில் 15 மில்லியன் ரூபா செலவில் இந்த உதவியை வர்த்தகரான சேனக சரச்சந்திர அண்மையில் செய்து கொடுத்துள்ளார்.

இந்த ஆஸ்பத்திரியில் இருதய சிகிச்சை பிரிவு இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வந்த நிலையில் மேற்படி வர்த்தகர் இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

தனது பிறந்த தினத்தையிட்டு வர்த்தகர் சேனக சரச்சந்திர இந்த உதவியை செய்துள்ளார்.

இவ்வாறிருக்க கடந்த வருடம் தனது பிறந்த தினத்தையிட்டு எம்பிலிப்பிட்டி பெரிய ஆஸ்பத்திரியில் புற்றுநோய் பிரிவுக்கு 50 இலட்சம் ரூபாவை அன்பளிப்பாக வர்த்தகர் சேனக சரச்சந்திர வழங்கியிருந்தார்.

இந்த உதவி தொடர்பாக எம்பிலிப்பிட்டி பெரிய ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கையில், எதிர்வரும் 2030ஆம் ஆண்டிலேயே இந்த ஆஸ்பத்திரிக்கு இருதய நோய் பிரிவு வசதி கிடைக்க இருந்ததாகவும் ஆயினும் இந்த பிரிவை ஆறு வருடங்களுக்கு முன்னர் தற்போது பெற்றுக் கொள்ளகிடைத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# வாகன விபத்தில் பெண் உயிரிழப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வத்துவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தை தொடர்ந்து வாகனத்தை செலுத்திய பாடசாலை அதிபர் ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கண்டி குருநாகல் வீதியில் இந்த வாகன விபத்து இடம்பெற்றதுடன், இந்த விபத்தில் கட்டுகஸ்தோட்டை, யட்டிவாவெல பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய ரத்நாயக்க முதியான்சலாகே பிசோமெனிக்கே என்பவர் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# மலைச்சாரல்

# கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியில் வகுப்பறை திறப்பு



கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியில் 25 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பப்பிரிவு மாணவிகளின் பெற்றோரால்புனர்நிர்மாணம்செய்யப்பட்ட வகுப்பறை கட்டடத்தொகுதி திறப்பு விழா ஆரம்பப்பிரிவு பொறுப்பாசிரியை தலைமையில் நடைபெற்றது. சுமார் 80 வருடம் பழைமை வாய்ந்த கட்டட கூரையை பாடசாலை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி அமைச்சின் அனுமதியுடன் புனரமைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அதிபர் நதீரா இஸ்மாயில் கட்டடத்தொகுதியை திறந்து வைத்தார். இதில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார், பாடசாலை அபிவிருத்தி குழுச் செயலாளர் ஹஸன், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவிகள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





மாத்தளை, நோர்த் மாத்தளை சின்னலெவகந்த ஸ்ரீகும்பத்து அம்மன் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேக விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது கோபுர கலசத்துக்கும் மூர்த்திக்கும் யாக சாலையிலிருந்து எடுத்து வரப்பட்ட கும்ப நீரினால் அபிஷேகம் செய்யப்படுவதையும் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்ட பெருந்தொகையான பக்தர்களையும் படங்களில் காணலாம். ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஏ.நாகலிங்கம், பிரதிஷ்ட பிரதம குரு வைதீஸ்வர வாசுதேவ குருக்கள் உட்பட சிவாச்சாரியர்கள் இதில் கலந்துகொண்டனர்.

# பிரதேச சாகித்திய விழா போட்டி 2024

கலாசார திணைக்களத்தால் வருடம் தோறும் ஏற்பாடு செய்யப்படும் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய சாகித்திய விழா இந்த வருடமும் பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளன. அதன்படி குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய போட்டியாளர்கள் தமது விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஆக்கங்களை குண்டசாலை பிரதேச செயலகத்துக்கு 30.06.2024 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கலாமென, குண்டசாலை உதவிப் பிரதேச செயலாளர் கே.ஜி.டி.சி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள கலாசார திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் ஹிமாலியுடன் (0703736611) தொடர்பு கொள்ளுமாறும், அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் முற்றுகை; இருவர் கைது

**ஊவா சுழற்சி நிருபர்**

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மொனராகலை மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பொலிஸ் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது, சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையமொன்றை கண்டுபிடித்துள்ளதுடன், இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

# மாணவர்களுக்கு யோகா பயிற்சி





**மாத்தளை சுழற்சி நிருபர்**

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சிகிரிய மத்திய கல்லூரியில் யோகா பயிற்சி நிகழ்வுகள் அக்கல்லூரி அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம் மற்றும் விவேகானந்த கலாசார நிலையம், மாத்தளை பிரம்மகுமாரிகள் நிலையத்தின் உதவியுடன் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.சிவஞானம், அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இதன்போது யோகா பயிற்சியில் மாணவர்கள் ஈடுபட்டதுடன், மாணவர்களுக்கு இலைக்கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

# கார் வீதியை விட்டு விலகி விபத்து





**அக்குறணை குறூப் நிருபர்**

ஹட்டன் – கண்டி வீதியில், குயில்வத்தை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை காரொன்று வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானது.

கார் சாரதிக்கு உறக்க களைப்பு ஏற்பட்டதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாமென, பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஹொரனையிலிருந்து நுவரெலியாவுக்கு வருகை தந்த காரே விபத்துக்குள்ளானது. இந்த விபத்தின் போது காரில் பயணம் செய்தவர்களுக்கு பாரிய ஆபத்து இல்லையெனவும், ஆயினும் மேற்படி கார் விபத்தினால் சேதமடைந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பாக ஹட்டன் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


## இலங்கை முதலீட்டுச் சபை

### பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2024-06-20ஆம் திகதிய வியாழக்கிழமை ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**SUPPLY & INSTALLATION OF 150W LED STREET LAMPS (20 NOS) AND CONSTRUCTION OF AN OUTDOOR TYPE GALVANIZED METER CUBICAL AT TEXTILE MANUFACTURING ZONE (ETMZ) PUNNAIKUDA, ERAVURPATTU, BATTICALOA**

**CONTRACT NO. BOI/TS/ETMZ/2024/05/74.04.007**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் 2024-06-20ஆம் திகதிய வியாழக்கிழமை மற்றும் 2024-06-22ஆம் திகதிய சனிக்கிழமை ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**



## afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.03.2024 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் திகதியில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 26-06-2024 | அக்குரஸ்ஸ, அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை, பதுளை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பொகவந்தலாவ, பொரளை சுப்பர், சங்கனை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா, கம்பளை, கனேமுல்ல, ஹட்டன், ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரக் கிளை, கடவத்தை, கதுருவெல, கடுவெல, கல்பிட்டிய, களுத்துறை, களுவாஞ்சிகுடி, கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட, கிரிந்திவெல, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருமன்காடு, குருநாகல், மஹரகம, மஹியங்கனை, மாலபே, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி, மொனராகலை, முழங்காவில், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பருத்தித்துறை, பூகொடை, புதுக்குடியிருப்பு, புத்தளம், புத்தளம் 2, ராகலை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, தலவாக்கலே, திருநெல்வேலி, திருகோணமலை, திருகோணமலை-2, உடப்புவ, வவுனியா, வார்ட் பிளேஸ், வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ. | 722, கோட்டே வீதி, ராஜகிரிய. |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டுவர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோபி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600



## தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

### உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக் கோரல்

NILET

2024/2025ம் ஆண்டிற்காக தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அகலவத்தை பயிற்சி நிலையத்தின் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தனிநபர்கள்/ நிறுவனங்களில் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத ரூ. 2000/- கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி 2024.06.24 மு.ப. 9.00 முதல் 2024.07.10 பி.ப. 3.00 வரை தலைமையக கணக்குப் பிரிவில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. இவ் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது மீளளிக்கப்படும் கேள்விப் பிணையாக ரூ. 5000.00 தொகையை நிறுவனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.
3. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அறிவுறுத்தல் பத்திரத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அவைகளை முறையாகப் பூர்த்தி செய்து, கேள்விப் பிணையை ரூ. 5000.00 செலுத்தியமைக்காக பற்றுச் சீட்டையும் மூலப்பிரதியில் கழறாதவாறு ஒட்டி “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதியை” வேறு வேறு உறைகளில் இட்டு, “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதி” என்று குறிப்பிட்டு, மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள்” என்று குறிப்பிட்டு தலைவர், பெறுகைக் குழு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இல.321/1, மாகும்புர பன்னிப்பிட்டிய என்ற முகவரிக்கு 2024.07.22 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அதற்காக நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகோரல் 2024.07.22 பி.ப. 2.00 இற்கு முடிவுறுத்தப்படுவதுடன், அன்றே பி.ப. 2.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.
4. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் எழுத்து மூல அனுமதி கொண்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.
5. எந்தக் கேள்விகளையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதியாக அமுல்படுத்தப்படும்.
6. தொ.பே.இல. 011 - 3092910 ஐ அழைத்து தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**இல. 321/1, ஹைலெவல் வீதி, மாகும்புர,**
**பன்னிப்பிட்டிய**



## சுற்றாடல் அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுற்றாடல் அமைச்சிற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல் 2024/2025**

1. 2024/2025ஆம் வருடங்களில் பத்தரமுல்ல, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, 416/C/1, ‘‘சொபாதம் பியஸ’’ எனும் இடத்தில் அமைந்துள்ள சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024 ஜூலை 15ஆம் திகதி முதல் 2025 ஜூன் 14ஆம் திகதி வரையில் சுற்றாடல் அமைச்சிற்கு மேற்கூறப்பட்ட சேவையை வழங்குவதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா தொகையை சுற்றாடல் அமைச்சின் சிறாப்பருக்கு வெவ்வேறான வகையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்கள் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். 2024-06-20ஆம் திகதி முதல் 2024-07-04ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் சுற்றாடல் அமைச்சின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கணக்கிடல் பிரிவில் விண்ணப்பப்படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது நிறுவனத்தின் சேவை அனுபவம் மற்றும் வேலை செய்யும் இயலுமை தொடர்பான தகவல்களை உறுதி செய்தல் வேண்டும். (அந்த சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்)
4. இரு பிரதிகளில் (02) பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு இரு கடித உறைகளில் இட்டு அக்கடித உறைகளை வேறொரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘சுற்றாடல் அமைச்சிற்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் - 2024/2025’’ எனக் குறிப்பிட்டு 2024-07-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் ‘‘சொபாதம் பியஸ’’ அலுவலகக் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் உள்ள நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிட்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் இலத்திரனியல் மூலமாக அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவைகள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுக்களைச் சமர்ப்பித்த கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் குறித்த நிறுவனத்தின் கடிதம் சகிதம் கலந்துகொள்ளலாம்.
5. மேலதிக விபரங்களை 011-2034111 எனும் தொலைபேசி இலக்கத்தில் நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
6. இந்த விலைமனுக்களை முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உண்டு என்பதுடன் இது தொடர்பில் சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சுற்றாடல் அமைச்சு,**
**‘‘சொபாதம் பியஸ’’,**
**இல. 416/C/1,**
**ரொபர்ட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

# கிழக்கின் குரல்



## மண்முனைப்பற்றில் செப்பனிடப்பட்டுள்ள கிரவல் வீதிகள் மக்கள் பாவனைக்கு கையளிப்பு

'மணல் வீதிகளற்ற கிராமங்கள்' எனும் கருத்திட்டத்துக்கமைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் 35 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய மிக முக்கிய மணல் வீதிகள் கிரவல் வீதிகளாக செப்பனிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் கிரவல் வீதிகளாக செப்பனிடப்பட்டுள்ள வேடுவர் குடியிருப்பு வீட்டுத்திட்ட வீதி மற்றும் புதுக்குடியிருப்பு புளியடி ஐந்தாம் குறுக்கு வீதி, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனால் நேற்றையதினம் வைபவ ரீதியாக மக்கள் பாவனைக்கு கையளித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் தட்சனாகௌரி தினேஷ், பிரதேச சபை செயலாளர் சர்வேஸ்வரன், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூ.பிரசாந்தன், கட்சியின் கல்வி, கலை, கலாசார பிரிவு செயலாளர் மணிசேகரன், கட்சியின் மண்முனைப்பற்று பிரதேச குழுத் தலைவர் ஜேக்கப், செயலாளர் கிரீஸ்கந்த முதலி, தொழிற்சங்க செயலாளர் தமிழ்வாணன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், கிராமிய மட்ட நிர்வாகிகள், பொதுமக்களாகிய பலரும் கலந்துகொண்டனர்.



வர்த்தக நிலையங்களில்

## கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனையாவதாக முறைப்பாடு

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் சில வர்த்தக நிலையங்களில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட புலனாய்வு அதிகாரிகளிடம் நுகர்வோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு அத்தியாவசிய பொருட்கள், வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதாகவும் தமது முறைப்பாட்டில் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுதல், நுகர்வுக்கு பொருத்தமில்லாத பொருட்கள் விற்பனை செய்யப்படுதல், காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோர் ஏமாற்றப்படுதல் போன்றவை இடம்பெறுவதாகவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

சில வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும், காலாவதியான உணவுப் பொருட்கள், பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாகவும், நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அதிகமான உள்ளூர் விற்பனை நிலையங்களில் கூடுதல் விலைக்கு உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்காலத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ள வேண்டுமெனவும், நுகர்வோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை ஜூன் 30 இல் திறக்க நடவடிக்கை

### கிழக்கு ஆளுநர் செந்தில் திறந்து வைக்கிறார்

காரைதீவு குறூப் நிருபர்



கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையை எதிர்வரும் 30ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைக்கவுள்ளதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தினர் மாவட்டச் செயலாளரை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தனர்.

இந்த சந்திப்பில் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் மு.வடிவேல், செயலாளர் செல்வானந்தன், பொருளாளர் இ.ஜெகநாதன் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது பத்து நாட்களுக்கு முன்னராக அதாவது 25ஆம் திகதி காட்டுப்பாதையை திறக்குமாறு ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை 30ஆம் திகதி திறக்கப்படவுள்ளதுடன், அப்பாதையை கிழக்கு மாகாண ஆளுநர் திறந்து வைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜனையும் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தினர் சந்தித்து கலந்துரையாடினர்.

## தரம் ஐந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்

தம்பலகாமம் குறூப் நிருபர்



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறுபேற்றை உயர்த்தும் நோக்குடன் திருகோணமலை பட்டணமும் சூழலும் கோட்டத்துக்குட்பட்ட பட்டணத்தெரு, வீரநகர், திருக்கடலூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தரம் ஐந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது மாணவர் ஒவ்வொருவருக்கும் 1,930 ரூபா பெறுமதியான ஆற்றல் எனும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் விக்கினேஸ்வரா, புனித சவேரியார் மற்றும் நாமகள் பாடசாலைகளில் வைத்து வழங்கப்பட்டன.

இந்த நூல்களை திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர். இதில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோராகிய பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறையில்

## சிறுவர் மற்றும் மகளிர் அலுவலகம் திறப்பு

நிந்தவூர் குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம், நிந்தவூர் மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அலுவலகம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ் மாஅதிபரின் வழிகாட்டலுக்கமைய நாடு முழுவதும் காணப்படும் பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அந்த வகையில் மேற்படி பொலிஸ் நிலையங்களிலும் மேற்படி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.எம் நஜீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண கலந்துகொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ஜே.எச். எம்.தமயந்த விஜயஸ்ரீ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ். கே.பண்டார, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எம்.பி.ஜெயபத்ம, அம்பாறை மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் பிரிவின் பொறுப்பதிகாரி டி.ஜி.கமகே, நிந்தவூர் பொலிஸ் ஆலோசனை சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது நிந்தவூர் டிஜிமைன்ட் முன்பள்ளி பாடசாலை சிறார்களுக்கு பிரதம அதிதியால் புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

## மதுபானசாலை திறப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



கிண்ணியா மத்திய, திருகோணமலை தினகரன் நிருபர்கள்

திருகோணமலையின் மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் பிரதேசத்தில் அண்மையில் திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பிரதேச மக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பேரணியுடன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூதூர் மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து மூதூர் பிரதேச செயலகம்வரை பேரணியாக சென்ற இம்மக்கள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், ஆர்ப்பாட்ட இறுதியில் மூதூர் பிரதேச செயலாளரிடம் மகஜரையும் கையளித்து வைத்தனர்.

திறக்கப்பட்டுள்ள இம்மதுபான சாலையை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சர்வமத தலைவர்கள், இளைஞர், யுவதிகளெனப் பலரும் கலந்துகொண்டு, மதுபானசாலை திறப்புக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

## கல்விக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய 24 ஆசான்கள் பாராட்டி கௌரவிப்பு





இறக்காமம் தினகரன் நிருபர்

இறக்காமம் பிரதேசத்தில் கடந்த சில தசாப்தகாலமாக மிகவும் பின்தங்கி காணப்பட்ட கல்விக்கு உரமூட்டி அர்ப்பணிப்புடன் சேவையாற்றி கல்வியாளர்களை உருவாக்கி விட்டு, தற்போது ஓய்வு பெற்றுள்ள 24 ஆசான்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இறக்காமம் குளக்கரை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இறக்காமம் ஐக்கிய அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் ஏ.கே.அஸ்வர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தூதுவராலயங்களின் நிர்வாக பணிப்பாளர் யு.எல்.நியாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது ஆசான்களின் அர்ப்பணிப்பான சேவையை உள்வாங்கி எழுதப்பட்ட விழுதுகள் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், முன்பள்ளி மாணவ மணிகளின் கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

## காத்தான்குடியில் யோகா பயிற்சி



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு காத்தான்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு யோகா பயிற்சி செயலமர்வு நேற்று புதன்கிழமை அப்பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

சர்வதேச யோகா தினம் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 21ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது.

உத்தியோகத்தர்களின் உடல், உள ஆரோக்கியத்தை பேணி பாதுகாத்திடவும் உள் உணர்வை அதிகரிக்கவும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வாக இந்த யோகா பயிற்சி நடத்தப்பட்டது. இதன்போது வாழும் கலை அமைப்பின் சிரேஷ்ட ஆசிரியர், டாக்டர் சாத்வி டயாமயி கலந்துகொண்டு யோகா பயிற்சி செயலமர்வை நடத்தினார்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உ.உதயசிறிதரின் ஆலோசனைக்கமைய நடத்தப்பட்ட யோகா பயிற்சியில் காத்தான்குடி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சில்மியா உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

## பாலமுனை சகவாழ்வு சங்க அங்குரார்ப்பணம்



திராய்க்கேணி தினகரன் நிருபர்

நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினால் பிரதேசங்கள் தோறும் சகவாழ்வு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பானின் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிரின் ஆலோசனைக்கமைய தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.றிஸானின் நெறிப்படுத்தலின் கீழ் பாலமுனை (திராய்க்கேணி) பிரிவுக்கான சகவாழ்வு சங்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிராம அலுவலர் எம்.எஸ்.எம்.இப்றாஹிம் உட்பட பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.

## தேசிய பொலிஸ் கடேட் மாணவர் சிப்பாய் படையணிக்கு பயிற்சி



மாளிகைக்காடு குறூப் நிருபர்

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் களுவாஞ்சிக்குடி தேசிய பொலிஸ் கடேட் மாணவ சிப்பாய் படையணிக்கு GUN PARADE பயிற்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

இப்பயிற்சியை மட்டக்களப்பு தேசிய பொலிஸ் கடேட் மாணவ சிப்பாய் படையணியின் இணைப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் கிளெஸ்ரன், பயிற்றுவிப்பாளர் அருண், 38ஆம் படையணியின் பயிற்சி அதிகாரி வினோசாந் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தின் பாடசாலை முதல்வர் எம். சபேஸ்குமாரின் வழிகாட்டலின் கீழ் பாடசாலையின் கடேட் பயிற்றுவிப்பாளர் எஸ்.முகுந்தனின் நெறிப்படுத்தலிலும், பிரதி முதல்வர் த.ஜனேந்திரராஜாவின் பங்களிப்புடனும் இப்பயிற்சி சிறப்பாக வழங்கப்பட்டது.

# ஊடகவியலாளர் வீடு, வாகனங்கள் மீது தாக்குதல் நீதியான விசாரணையை கோரி யாழில் போராட்டம்







(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் வீடு மீது தாக்குதல் நடாத்தி வாகனங்களுக்கு தீ மூட்டிய சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என கோரி யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்றைய தினம் புதன்கிழமை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது கடந்த வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக்கும்பல் தாக்குதல் நடத்தியது.

இதன்போது வீட்டிற்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டதுடன் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

இந்த சம்பவத்தினை கண்டித்தும், நீதியான விசாரணைகளை முன்னெடுத்து, உண்மை குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும் என கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை தாக்குதல் சம்பவம் தொடர்பில், அச்சுவேலி , மாவிட்டபுரம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்த மூவரை அச்சுவேலி பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் உதயம்

# தமிழ் பொதுவேட்பாளர் ஆதரவுக் கூட்டங்கள்

ஓமந்தை விஷேட நிருபர்



நடைபெற இருக்கும் 2024 சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தமிழ் மக்கள் பொதுச்சபை தொடர் கலந்துரையாடல்களையும் கூட்டங்களையும் நடாத்தி வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக 14.06.2024 அன்று வெள்ளிக்கிழமை மாலை கொடிகாமம் வர்த்தக சங்கத்தினருடனான கலந்துரையாடல் இடம் பெற்றது. 18.06.2024 அன்று காலை சங்கானை கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டியதன் அவசியம் பற்றியும் தமிழ் மக்கள் ஒன்றுசேர தவறும்பட்சத்தில் தமிழ்மக்களின் வாக்குகளும் பலமும் சிதறும் ஆபத்துக்கள் பற்றியும் தமிழ் மக்கள் பொதுச்சபையின் சார்பாக கலந்துகொண்டோர் விளக்கமளித்தனர்.

அத்துடன் கலந்துகொண்டவர்களோடு கேள்வி பதில் உரையாடல்களும் இடம்பெற்றன. தொடர்ந்துவரும் நாட்களில் தங்களின் பங்களிப்பும் இருக்கும் என கலந்துகொள்ளும் மக்கள் அமைப்புகளின் அங்கத்தவர்கள் நம்பிக்கை வெளியிட்டு வருகின்றனர்.

# மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 60 பயனாளிகளுக்கு 'நீண்டகால பயிர்கள்' வழங்கி வைப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தினால் தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகளுக்கு 'நீண்ட கால பயிர்கள்' வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (18) மாலை கரம்பை குளம் கிராமத்தில் இடம் பெற்றது.

'நீண்ட கால பயிர் உற்பத்தி ஊடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்' எனும் திட்டத்தின் கீழ் மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயம் மன்னார் மாவட்டத்தில் பேசாலை, வேப்பங்குளம் மற்றும் கரம்பைக்குளம் ஆகிய 3 கிராமங்களில் இருந்து 60 பயனாளிகளுக்கு தேவையான மா, தென்னை மற்றும் பப்பாசி உள்ளடங்களாக நீண்ட கால பயிர்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

கரித்தாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் கலந்து கொண்டார். மேலும் தேசிய நிலையத்தில் இருந்து திட்டத்தின் பொறுப்பாளர்களான சோபா மற்றும் பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டதோடு, முருங்கன் மெதடிஸ்த போதகரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நீண்ட கால பயிர்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, விருந்தினர்களினால் நடுகை செய்யப்பட்டது.

இத்திட்டமானது ஜேர்மன் நாட்டில் உள்ள மிசிரியோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் கொழும்பு தேசிய நிலையத்தின் ஊடாக மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயம் இத்திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் அமுல் படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

### வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென் பகுதி மக்களுக்கு

# லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக பல்வேறு உதவிகள்

(சாவகச்சேரி விசேட நிருபர்)



அண்மையில் நாட்டின் தென் பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இயல்புநிலை பாதிப்படைந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு லைக்கா ஞானம் அறக்கட்டளை பல்வேறு வகையான நிவாரண மற்றும் சுகாதார சேவைகளை வழங்கியுள்ளது.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிறுவுனர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிகாட்டுதலின் கீழ் வெள்ள அனர்த்ததால் பாதிக்கப்பட்ட கொழும்பு அவிசாவளை, காலி, களுத்துறை, இரத்தினபுரி அயகம பிரதேச மக்களுக்கு அத்தியவசிய பொருட்கள் அடங்கிய நிவாரண பொதி, சமையல் உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள், குடிநீர் விநியோகம் ஆகியவற்றை வழங்கியதுடன், வெள்ளத்திற்குள் சிக்குண்டு கிராமத்தை விட்டு மீள முடியாமல் இருந்த மக்களுக்கு கடற்படையின் உதவியுடன் படகில் சென்று சமைத்த உணவுகளையும் வழங்கி வைத்துள்ளனர்.

உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் பணியாளர்கள், தன்னார்வ தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பட்டம்பெற்ற கண் பார்வையற்ற தம்பதியினர் கௌரவிப்பு

(யாழ். விசேட நிருபர்)



யாழ் மாவட்ட மகளிர் விவகார குழுக்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக பட்டம் பெற்ற கண் பார்வையற்ற தம்பதியினர்களுக்கு அவர்களது விடாமுயற்சியினூடாக கல்விப்புலம் சார்ந்த சாதனையைப் பாராட்டி நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் முன்னிலையில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

பட்டம் பெற்ற தம்பதியினரை யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் தர்சினி ஆகியோர் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசும் வழங்கி கௌரவித்தனர். இந் நிகழ்வில் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட உளவளத்துணை உதவியாளர், யாழ் மாவட்ட மகளிர் சம்மேளன அங்கத்தவர்கள், நலன்புரிச் சங்கத்தின் தலைவர், சங்கானை மரக்கறி வியாபாரிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### 'பெண்கள் வலுவூட்டல்களுக்கான யோகா' எனும் கருப்பொருளில்

# மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியில் இடம்பெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வு



(மன்னார் குறூப் நிருபர்)

சர்வதேச யோகா தினத்தை யொட்டி நேற்றைய தினம் (19) 'பெண்கள் வலுவூட்டல்களுக்கான யோகா' எனும் கருப்பொருளில் மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரி மைதானத்தில் சர்வதேச யோகா தின நிகழ்வுகள் இடம் பெற்றது.

நேற்றைய தினம் (19) மிகவும் சிறப்பாக நடைபெற்ற குறித்த யோகா நிகழ்வில் இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்நிகழ்வில் யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், நானாட்டான் டிலாசால் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் மனோ, நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

யோகா தின நிகழ்வில் பாடசாலையின் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### தண்ணீர் பவுசர் பொலிஸ் நிலையத்தில்

# குடிநீருக்கு அல்லல்படும் கரைநகர் மக்கள்

(யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் விபத்தில் சிக்கிய தண்ணீர் பவுசரை பொலிஸார் தடுத்து வைத்திருப்பதனால், காரைநகர் பகுதி மக்கள் குடிநீருக்கு அல்லல்பட்டு வருகின்றனர்.

| அம்ச இல. | வேலையின் விளக்கம் | பி. பொ. பிராந்தியம் |
|---|---|---|
| 01. | பாணந்துறை-நாம்பபாண-இரத்தினபுரி வீதியில் 67/4-67/5 (RHS) என்ற இலக்கமுடைய மதகில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் | இரத்தினபுரி |

மேலேயுள்ள வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. 2024.06.21 ஆம் திகதியிலிருந்து 2024.07.10 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கங்களை பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இரத்தினபுரி.**

---

# பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## மேல் மாகாண அழகியற்கலை நிலையத்தின் தியேட்டர் செவன் அரங்கை புதுப்பித்தலுக்குத் தேவையான ரெடிமிக்ஸ் கொங்கிறீட் மற்றும் Paving Blocks கொள்வனவு செய்தல்

## கேள்வி இலக்கம் : PRDA/WP/PRO/2024/38

இவ் அதிகார சபையின் கீழ்க்காணும் கொள்வனவு செய்வதற்கு இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**ரெடிமிக்ஸ் கொங்கிறீட் (Grade 25)**

| தொடர் இல. | விபரம் | அலகு | அளவு | கேள்விப் பிணை (ரூ) (காசாக) அல்லது | கேள்விப் பிணை (ரூ) (வங்கி காப்புறுதி/கம்பனிகள்) |
|---|---|---|---|---|---|
| 01 | Supply of Ready mix concrete grade 25 | Cum | 73.00 | 10,000.00 | 20,000.00 |

**Paving Blocks**

| தொ. இல. | விபரம் | அலகு | அளவு | கேள்வி பிணை (ரூ) (காசாக) அல்லது | கேள்விப் பிணை (ரூ) (வங்க/ காப்புறுதிகள் கம்பனிகள்) |
|---|---|---|---|---|---|
| 01 | Supplying 80 mm thick rectangular (Approx. Size 200mm x 100mm) COBBLE 60 (dil) Natural Colour precast Interlocking paving Blocks of 40 N/mm2 Compressive strength for fore court and open theater including Transport | Nos | 7,210 | 22,500.00 | 45,000.00 |
| 02 | Supplying 80 mm thick rectangular (Approx. Size 200mm x 100mm) 50N PC60B CB Colour Precast Interlocking paving Blocks of 40 N/mm2 Compressive strength for fore court and open theater including Transport | Nos | 1,803 | | |
| 03 | Supplying 80 mm thick Square shape (Approx. Size 100mm x 100mm) wash finish elina Dol Black Colour Precast Interlocking paving Blocks of 40 N/mm2 Compressive strength for fore court, open theater and new Cafeteria Area including Transport | Nos | 54,075 | | |
| 04 | Supplying 80 mm thick Square shape (Approx. Size 100mm x 100mm) wash finish elina Dol Red Colour Precast Interlocking paving Blocks of 40 N/mm2 Compressive strength for fore court and open theater including Transport | Nos | 4,120 | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.06.20 முதல் 2024.07.03ம் வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணம் ரூ.1209.50 இற்கு உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை முறியை காசாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 50 மி. இற்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் குறித்த 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.07.04 மு.ப. 10.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ.பே. இல .: 011 - 4849845**

---

# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/126<br>வாடகைக்கு மோட்டார் கார்<br>பிரதம மின் பொறியியலாளர் (கல்முனை)<br>(இரண்டு வருட காலம்) | 10-07-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர்<br>அலுவலகம்,கல்முனை<br>067-2229276<br>அல்லது<br>பிரதிப் பொது பொறியியலாளர்(கிழக்கு)<br>அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/128<br>வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் - I(திட்டமிடல்)- பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 10-07-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு)<br>அலுவலகம்,<br>திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன்

கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும்வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# கேள்வி கோரல்களுக்கான அழைத்தல் (IFB)

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**(Ministry of Transport and Highways)**

## இபோச டிப்போக்கள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் மாகாண வேலைத்தளங்கள் ஆகியவற்றிற்காக தனியார் பாதுகாப்பு சேவைகளை வழங்கல்

## Procurement No.: MT/04/09/04/MT/611

1. தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறையின் கீழ் 2024.07.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கமைவாக இபோச டிப்போக்கள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் மாகாண வேலைத்தளங்கள் ஆகியவற்றிற்கு தனியார் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக தகுதியுள்ள பாதுகாப்பு சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி போடப்பட்ட கேள்விக்கோரல்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத்தலைவர் பெற்றுக் கொள்வார். கேள்விக் கோரல்கள் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் படிவங்களிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விக்கோரல் ஆவணங்கள் 2024.06.20 ஆம் திகதியிலிருந்து 2024.07.10 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத விண்ணப்ப படிவத்திற்கான கட்டணமான 35,000 ரூபாவை வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கேள்விக் கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.

| தொ. இல. | இபோச பிராந்தியம் | பிராந்தியத்திலுள்ள டிப்போக்கள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் மாகாண வேலைத்தளங்கள் | 12 மணித்தியால முறை மாற்றுக் களுக்காக தேவைப்படும் பாதுகாப்பு அலுவலர் களுக்கான மொத்த பாதுகாப்பு அலுவலர்களின் மொத்தம். | பிராந்தி யத்திற்கான கேள்விக் கோரல் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1.1 | கொழும்பு | அங்கொட, ஹோமாகம, மட்டக்குளிய, கெஸ்பேவ, மொறட்டுவ, உடஹமுல்ல, மீதொட்டமுல்ல, அவிசாவளை, இரத்மலான, கட்டுபெத்த டிப்போக்கள் | 72 | 350,000.00 |
| 1.2 | களுத்துறை | ஹொரண, மத்துகம, அளுத்கம டிப்போக்கள் மற்றும் புளத்சிங்கள உபடிப்போ | 28 | 150,000.00 |
| 1.3. | கம்பஹா | கும்பஹா, ஜா-எல, வெலிசர, திவுலப்பிட்டிய, கிரிந்திவல, கடவத்த, நீர்கொழும்பு, களனி, நிட்டம்புவ டிப்போக்கள் | 92 | 450,000.00 |
| 1.4 | நுவரெலியா | நாவலப்பிட்டிய, நுவரெலியா, வலப்பன, ஹங்குராக்கெத்த, கொத்மலை, கம்பளை டிப்போக்கள் மற்றும் குருந்துவத்த உபடிப்போ மற்றும் நுவரெலியா பிராந்திய அலுவலகம் | 72 | 350,000.00 |
| 1.5 | மஹநுவர | கண்டி வடக்கு, கண்டி தெற்கு, வத்தேகம, உடுதும்பர, மாத்தளை, யட்டிநுவர டிப்போக்கள் | 67 | 350,000.00 |
| 1.6 | சப்ரகமுவ | கலவான, பலங்கொட, தெரணியகல, மாவனல்ல, இறம்புக்கன, கேகாலை டிப்போக்கள் மற்றும் வரக்காபொல உபடிப்போக்கள் | 57 | 300,000.00 |
| 1.7 | ரஜரட்ட | கப்பித்திகொல்லாவ, பொலன்னறுவ, கந்தளாய், ஹொரவப்பொத்தான, கெக்கிராவ டிப்போக்கள் மற்றும் தியசென்புர உபடிப்போ | 34 | 200,000.00 |
| 1.8 | ஊவா | மஹியங்கனை, தெஹியத்தக்கண்டிய, பிபில, கெப்பிட்டிப்பொல டிப்போக்கள் | 32 | 200,000.00 |
| 1.9 | வயம்ப | மஹவ, புத்தளம், வென்னப்புவ, வாரியபொல, குளியாப்பிட்டிய, நிக்கவரட்டிய, கல்கமுவ, அளவ்வ, கிரியுள்ள டிப்போக்கள் மற்றும் ஆனமடுவ அத்துடன் நாரம்மலய உபடிப்போக்கள் | 75 | 400,000.00 |
| 1.10 | றுஹுூண | அம்பலாங்கொட, எல்பிட்டிய, உடுகம, அக்குரஸ்ஸ, கொக்கல, ஹக்மன, அம்பலாந்தொட்ட டிப்போக்கள் மற்றும் ஜின்தொட்ட மற்றும் பெட்டிகலவத்த மாகாண வேலைத்தளங்கள் | 93 | 500,000.00 |
| 1.11 | கிழக்கு | ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, கிண்ணியா, மூதூர், சம்மாந்துறை, வாழைச்சேனை, வாகரை டிப்போக்கள் | 53 | 300,000.00 |
| 1.12 | வடக்கு | யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா டிப்போக்கள் மற்றும் மல்லாகம் மாகாண வேலைத்தளம், வடக்கு பிராந்திய அலுவலகம் மற்றும் யாழ்ப்பாண பஸ் நிலையம் | 65 | 350,000.00 |

2. பாதுகாப்பு அமைச்சிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரிமத்தையுடைய பாதுகாப்பு சேவைகளை வழங்குவதில் 3 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தையுடைய மற்றும் ஆகக் குறைந்தது 100 ஊழியர்களை கொண்டுள்ளவர்கள் கேள்விக் கோரல்களை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
3. 2024.07.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் கேள்விக்கோரல்களுக்கான முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.
4. கேள்விக் கோரல்கள் 2024.10.11 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் ஆனால் முன்வைக்கப்பட்ட விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு நிலையாகவிருத்தல் வேண்டும்.
5. கேள்விதாரர் ஒரு பிராந்தியத்திற்கு அல்லது பல எண்ணிக்கையான பிராந்தியங்களுக்கு கேள்விக்கோரல்களை சமர்ப்பிக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ளவாறு முன்வைக்கப்பட்ட பிராந்தியங்களுக்கான மொத்த இயையுடைய பெறுமதியானது 2024.11.11 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான பிணை முறியானது/ பிணைமுறிகளானது இபோச இனால் சமர்ப்பிக்கப்படும் முதலாவது எழுத்து மூலமான கோரிக்கையின் பிரகாரம் மாற்றமுடியாததும் நிபந்தனையற்ற தன்மையில் மாற்றக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் அங்கீகரிக்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணை முறியொன்றுடன் இணைக்கப்பட்டிராத கேள்விக்கோரல்கள் நிராகரிகப்படும்.
6. கேள்விதாரரொருவருக்காக அல்லது அவரின் சார்பாக முகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்படும் ஒவ்வொரு கேள்விதாரர் மற்றும் எந்த நபரொருவரும் கேள்விக் கோரல்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, ‘‘சமாகம மெதுர’’ பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். பதிவு செய்தலின் மூலப்பிரதியானது கேள்விக்கோரலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் கேள்விதாரர்களின் கேள்விக்கோரல்கள் நிராகரிக்கப்படும்.
7. கேள்விக் கோரல் ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் கேள்விதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.
8. 2024.07.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் கேள்விக் கோரல்கள் பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விக்கோரல் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். கேள்விக் கோரலை அடக்கியுள்ள முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Supply of Private Security Services to SLTB Depots, Regional Officers and Provincial Workshops”** என அடையாளமிடப்படல் வேண்டும்.
9. கேள்விக் கோரலானது 2024.07.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அவைகள் அதன் பின்னர் உடனடியாகவே பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ‘‘செத்சிரிபாய’’, 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விக்கோரல்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7 ஆம் மாடி, ‘‘செத்சிரிபாய’’. II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**விசாரணைகள்: பிரதான பெறுகை முகாமையாளர்.**
**தொலைபேசி: 011 7706110, 0771056204. தொலை/தொலைநகல்: 011 2588457**

# கேள்வி கோரல் அழைப்பு

## பிளாஸ்டிக் கதிரை கொள்வனவு செய்யும் பெறுகை (பொலன்னறுவை மாவட்ட செயலகம்)

**ஒப்பந்த இலக்கம் : POL/DST/FRM/07/01/010**

## மாவட்ட செயலகம் - பொலன்னறுவை

01. பொலன்னறுவை மாவட்டத்தின், பிரதேச செயலக பிரவுகளுக்கு பிளாஸ்டிக் கதிரைகளை கொள்வனவு செய்தல் சார்பாக தகைமையுடைய வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள், மாவட்ட செயலகத்தின் பெறுகைக் குழுவினால் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | பெறுகையின் பெயர் | கேள்விப் பிணையின் பெறுமதி | பொருட்கள் வழங்க வேண்டிய இடங்கள் | விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி மற்றும் கேள்விகள் திறத்தல் |
|---|---|---|---|---|
| POL/DST/ FRM/07/01/010 | பிளாஸ்டிக் கதிரைகளை கொள்வனவு செய்யும் பெறுகை (கைப்பிடியுடன்/ இல்லாமல்) | ரூ.250,000.00 | தமன்கடுவ பிரதேச செயலகம் திம்புலாகல பிரதேச செயலகம் பெலிகந்த பிரதேச செயலகம் மெதிரிகிரிய பிரதேச செயலகம் ஹிங்குரக்கொட பிரதேச செயலகம் எலஹர பிரதேச செயலகம் | 2024 ஜுலை 11 பி.ப. 2.00 |

02. ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு பொலொன்னறுவை மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர்/ கணக்காளரிடம் இருந்து (027 - 2222061) மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன், கீழே குறிப்பிடப்படும் முகவரியில் 2024 ஜுன் 20 முதல் 2024 ஜுலை 11 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் தேவையான தகைமைகள் மற்றும் கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. எழுத்து மூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத ரூ.2000.00 தொகையை, பொலொன்னறுவை மாவட்ட செயலகத்தின் காசாளர் பிரவிற்கு காசாக மாத்திரம் செலுத்துவதன் பேரில் கேள்வி கோரல் ஆவணத் தொகுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு 2024 ஜுலை 11 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**பொலன்னறுவை,**
**தொ.பே.இல : 027 - 2222061**
**2024.06.20**

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரண உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Infant Incubators Transport | 10 | 32.00 | 12,500.00 |
| 02 | Infant Incubators | 20 | 60.00 | 12,500.00 |
| 03 | Multipara Monitors - OT | 15 | 45.00 | 12,500.00 |
| 04 | Delivery Beds | 20 | 12.00 | 3,500.00 |
| 05 | X Ray Tube for Philips MX 16 CT Scanner Machine | 01 | 34.00 | 12,500.00 |
| 06 | Heart Lung Machine | 01 | 80.00 | 20,000.00 |
| 07 | ACCESSORIES FOR BP APPARATUS | 500 | 5.20 | 500.00 |
| 08 | NIBP CUFFS FOR PATIENT MONITORS | 1100 | 18.00 | 500.00 |
| 09 | SPO2 SENSORS FOR PATIENT MONITORS | 4150 | 18.00 | 500.00 |
| 10 | RECHARGEABLE BATTERY PACKS FOR DEFIBRILLATORS | 110 | 8.00 | 500.00 |
| 11 | TEMPERATURE SENSORS FOR INFANT INCUBATORS & WARMERS | 140 | 3.00 | 500.00 |
| 12 | ETCO2 SENSORS FOR PATIENT MONITORS | 630 | 20.00 | 500.00 |
| 13 | Defibrillator / Pressure Analyser | 07 | 21.14 | 3,500.00 |
| 14 | Infusion Device Analyser | 01 | 7.00 | 1,000.00 |
| 15 | Electronic Work Bench with Chair | 13 | 4.13 | 1,000.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-06-20ஆம் திகதி முதல் 2024-07-15ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்’’ என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-07-16ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-10-15ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2024-11-12ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10**

Sunday Observer adz
தினகரன்
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளரர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

**சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர் (Marketing Executive)**

**முக்கிய பொறுப்புகள்**

- வர்த்தகநாம தெரிவுநிலையை அதிகரித்தல், பல்வேறு டிஜிட்டல் தளங்களின் வாடிக்கையாளர் ஈடுபாட்டை அதிகரித்தல் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரங்களை உருவாக்கி செயற்படுத்துதல்.
- பார்வையாளர்களின் இலக்குகளை திறம்பட அடைய மற்றும் சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைய ATL & BTL விளம்பர முயற்சிகள் / செயற்பாடுகளை உருவாக்கி செயற்படுத்துதல்.
- வர்த்தகநாம இருப்பை அதிகரிக்க மற்றும் முன்னணிகளை உருவாக் தயாரிப்பு வெளியீடுகள், விளம்பர நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகளைத் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்துதல்.
- ஒட்டுமொத்த வர்த்தக நோக்கங்களுடன் சந்தைப்படுத்தல் உத்திகளை சீரமைப்பதை உறுதிசெய்ய குறுக்கு-செயற்பாட்டு குழுக்களுடன் ஒத்துழைத்தல்.
- தயாரிப்பு வர்த்தகம் மற்றும் விளம்பர முயற்சிகளுக்கான வாய்ப்புகளை அடையாளம் காண சந்தை ஆராய்ச்சி மற்றும் நுகர்வோர் போக்குகளை பகுப்பாய்வு செய்தல்.
- பார்வையாளர்களை ஈடுபடுத்துவதற்கும் போக்குவரத்தை அதிகரிப்பதற்கும் இணையதளம், சமூக ஊடகங்கள், மின்னஞ்சல் பிரசாரங்கள் உள்ளிட்ட டிஜிட்டல் அலைவரிசைகளுக்கு அழுத்தமான உள்ளடக்கத்தை உருவாக்குதல்.
- சந்தைப்படுத்தல் பிரசாரங்களின் செயற்றிறனை மதிப்பிடுவதற்கும் அதிகபட்ச தாக்கத்திற்கான உத்திகளை மேம்படுத்துவதற்கும் முக்கிய செயற்றிறன் அளவீடுகளை கண்காணித்து பகுப்பாய்வு செய்தல்.
- தொழில்துறையின் போக்குகள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங், விளம்பரம் மற்றும் நிகழ்வுகள் மேலாண்மை ஆகியவற்றில் சிறந்த நடைமுறைகளை பகுப்பாய்வு செய்து புதுமைகளை உருவாக்குதல், போட்டித்தன்மையை பராமரித்தல்.
- சந்தைப்படுத்தல் செலவை மேம்படுத்த வரவு செலவை திட்டமிடுதல் மற்றும் கண்காணிப்பில் உதவுதல்.

**தகைமைகள்**

சந்தைப்படுத்தலை ஒரு பாடமாகவும் அத்துடன் சந்தைப்படுத்தல் அல்லது வியாபார நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

தொழில்சார் சந்தைப்படுத்தல் நிறுவனமொன்றின் ஒரு இணை அங்கத்துவம்

**அல்லது**

கீர்த்தி வாய்ந்த நிறுவனத்திலிருந்தான சந்தைப்படுத்தல் டிப்ளோமா

**அனுபவம்**

ஒட்டுமொத்தமாக, புகழ்பெற்ற நிறுவனத்தில் இரண்டு (02) வருட நிர்வாக அனுபவத்துடன் சந்தைப்படுத்தலில் நான்கு (04) வருட அனுபவம். ஒரு நிதி நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் அனுபவம் ஒரு தனித்துவமான நன்மையாக இருக்கும்.

**சம்பளம்**

**சம்பள அளவு:** ரூபா 62,060 – 980 x 20 - 81,660/- ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (வாழ்க்கைச் செலவுப்படி, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு)

**வயது:** 40 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**பொது நிபந்தனைகள்**

**தேர்வு முறை -** வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 04/07/2024**

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் சுய விபரங்களுடன் கல்வி/ தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண் என்பவற்றை பின்வரும் மின்னஞ்சல் ஊடாக அனுப்ப வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு மூலப் பிரமாணங்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

**விண்ணப்பங்களை Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.**

---

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெலிசறை மற்றும் மிரிஹானை தடுப்பு நிலையங்களில் தடுத்து வைத்துள்ளவர்களுக்கு உணவு வழங்குதல்**

**ஒப்பந்த இலக்கம் : DIE/PRO/05/2024/74**

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெலிசறை மற்றும் மிரிஹானை தடுப்பு நிலையங்களில் தடுத்து வைத்துள்ளவர்களுக்கு உணவு வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

03. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுகுறுபாயா”, 5 ஆம் மாடி, “B” பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து 2024.06.20 ஆம் திகதி முதல் 2024.07.09 ஆம் திகதி வரை எந்தவொரு கடமை நாளிலும் மு.ப. 9.00 மணி - பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

    தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.:011-2101559

04. மீளளிக்கப்படாத ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூ.5,500/-) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை, பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுகுறுபாயா”, 5 ஆம் மாடி, “B” பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் 2024.06.20 ஆம் திகதி முதல் 2024.07.09 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். காசாக கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்

05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை, “மூலப்பிரதி”, “இணைப்பிரதி” என இரு பிரதிகளில் தயாரித்து, 2024.07.10 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் 5 ஆம் மாடி, “B” பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவோ வேண்டும். விலைமனுக் கோரல் முடிவடைந்த உடனே மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வருகைதருவதற்கு விருப்பம் தெரிவித்த விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்

06. விலைமனுதாரர்களினால் கையளிக்கப்படுகின்ற விலைமனுவானது, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

07. எல்லா விலைமனுக்களும், விலைமனுக்கோரல் ஆவணத்தில் பந்தி 3.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு, விலைமனு பிணைமுறியொன்றுடன், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் (முகவரிக்கு) அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனு பிணைமுறியானது ரூபா நான்கு இலட்சம் (ரூ.400,000/-) பெறுமதியைக் கொண்டதும், 2024.10.22 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியொன்றினால் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

08. விலைமனு முன் சந்திப்பொன்று 2024.07.01 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்ல, “சுஹுறுபாயா”, 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவில் நடைபெறும்.

**ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,**
**“சுஹுறுபாயா”, ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

---

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கிலக்கம் -** DTS/125/2024
**தன்மை** - மரணசாதனம்
**நடைமுறை** - சுருக்கம்
**பெறுமதி** - ரூ. 4,665,000.00

ஜர்மனி Hanover 30161 Rambergstr 32ஐச் சேர்ந்த உல்ரிச் ஹோப் (ULRICH HAUPT) என்பவரின் மரணச் சாதனமில்லா சொத்து சம்பந்தமாக ஜர்மனி ஹனோவர் மாவட்ட நீதிமன்றத்தினால் ஜர்மனி Markvippach 99195 Bachstdt Dorfstr 32ஐச் சேர்ந்த ரெய்னர் போ்ண்ட் ரூபி (RAINER BERND RUBY) என்பவருக்கு வழங்கப்பட்ட மரணச் சொத்து நிருவாகப் பத்திரங்கள்/ மரபுரிமை சான்றிதழ் என்பவற்றை மீள் முத்திரையிடுவதற்கான 1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்க சிவில் நடைமுறைக் கோவை (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட சிவில் நடைமுறைக் கோவையின் அத்தியாயம் XXXVIIIB இன் கீழான விண்ணப்பம் விடயத்தில்

**இறந்தவர்**

ஜர்மனி, Markvippach 99195, Bachstdt Dorfstr 32ஐந் சேர்ந்த ரெய்னர் போ்ண்ட் ரூபி RAINER BERND RUBY.

இலங்கையில் புஹுல்வெல்ல கிரிந்த மஸ்ஜித் வீதி, குட்டிய வத்த, 254/Dஐச் சேர்ந்த மொஹமட் சித்தீக் செய்னுல் அன்வர் ஆகிய தனது அட்டோர்ணி தத்துவக்காரர் மூலம் தோன்றும்

**மனுதாரர்**

ஜர்மனி, Hanover 30161 Rambergstr 32ஐச் சேர்ந்த உல்ரிச் ஹோப் (ULRICH HAUPT) என்பவரின் மரணச் சாதனமில்லா சொத்து சம்பந்தமாக ஜர்மனி ஹனோவர் மாவட்ட நீதிமன்றத்தினால் ஜர்மனி Markvippach 99195 Bachstdt Dorfstr 32ஐச் சேர்ந்த ரெய்னர் போ்ண்ட் ரூபி (RAINER BERND RUBY) என்பவருக்கு வழங்கப்பட்ட மரணச் சொத்து நிருவாகப் பத்திரங்கள்/ மரபுரிமை சான்றிதழ் என்பவற்றை மீள் முத்திரையிடுவதற்காக இது பிரசுரிக்கப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்கள் கழிந்த பின்னர் 1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்க சிவில் நடைமுறைக் கோவை (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட சிவில் நடைமுறைக் கோவையின் தொகுதி XXXVIIIB இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்படும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2024ஆம் ஆண்டு மாதம் ஆம் திகதியாகிய இன்று கொழும்பில் வைத்து

**டி.எல் & எப். டி. சேரம்,**
**மேல்பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர் சார்பிலான**
**சட்டத்தரணிகள்**

---

**மேல் நீதிமன்றம் - கல்முனை**

## கேள்வி அறிவித்தல்

கல்முனை மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

**தொகுதி 01**

01. மேல் நீதிமன்றம் கல்முனை
02. மாகாண மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் கல்முனை
03. மாவட்ட நீதிமன்றம் கல்முனை
04. நீதவான் நீதிமன்றம் கல்முனை

**தொகுதி 02**

01. மாவட்ட / நீதவான் நீதிமன்றம் அக்கரைப்பற்று
02. மாவட்ட / நீதவான் நீதிமன்றம் பொத்துவில்
03. நீதவான் நீதிமன்றம் சம்மாந்துறை

எனவே சுத்திகரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் கல்முனை மேல் நீதிமன்றக் கணக்குப் பிரிவில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 1000/- யும் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா 2500/- யும் செலுத்தி 19.06.2024 புதன் கிழமையிலிருந்து, 03.07.2024 வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் புதன் கிழமை பி.ப. 1 மணி 03.07.2024 பி.ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்வதுடன் பி.ப. 3.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**மேல் நீதிமன்ற நீதிபதி**
**மேல் நீதிமன்றம்**
**கல்முனை.**

**மேலதிக தொடர்புகளுக்கு : 0672224984 / 0672225458**

---

**நீர்ப்பாசன அமைச்சு**

**நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனம் - கொத்மலை**

KITI - IWM

## நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்காக பயிலுநர்களை சேர்த்தல் – 2024

கொத்மலை, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் தேசிய தொழிற்றிறன் 06ஆம் நிலைக்காக அங்கீகரிக்கப்பட்ட முழுமையான அரச நிறுவனமாகும். இந்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருட முழு நேர நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜை, திருமணமாகாத அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த பயிற்சிக் கற்கைநெறி இரண்டு வதிவிட பயிற்சியுடனும் மற்றும் ஒரு வருட வெளிக்கள பயிற்சிக் காலத்தையும் கொண்டதாகும்.

### 1) பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்ளல்

- குறைந்தபட்ச தகைமை

  விண்ணப்பதாரர் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

  i. க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணித பாடப்பரப்பில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

  ii. விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளில் 25 வயதிற்குக் குறையாதவராகவும் சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

### 2) பயிற்சிக்காக ஆட்சேர்க்கப்படும் முறை

i. தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர் கணிதம், பொது அறிவு மற்றும் உளச் சார்பு போன்ற பாடங்களுக்காக ஆங்கில மொழியில் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். வினாப் பத்திரத்திற்கு விடை எழுதும் காலம் 1 1/2 மணித்தியாலமாகும்.

ii. எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப்பரீட்சையொன்றுக்கு தோற்றுதல் வேண்டும்.

iii. எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் கற்கை நெறிக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

### 3) விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் விபரங்கள்:

i. நிறுவனத்தின் இணையதளப் பக்கத்திற்கு (www.kitiiwm.gov.lk) பிரவேசித்து இயைபுடைய விண்ணப்பப் படிவத்தை Online முறையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

ii. விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

iii. விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 2024 ஜூலை மாதம் 14ஆம் திகதியாகும்.

iv. விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது பெறுபேறுகளை உறுதி செய்து கொள்வதற்காக சாதாரண தரப் பரீட்சை சான்றிதழ், உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ்களின் Scan பிரதியொன்று (PDF) மற்றும் வயதை உறுதி செய்துகொள்வதற்காக பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் Scan பிரதியொன்றை (PDF) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

### 4) விசேட நிபந்தனைகள்

i. பயிற்சி கற்கைநெறி ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும்.

ii. இந்த பயிற்சி கற்கைநெறிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான சகல செலவுகளும் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன், தங்குமிட வசதிகள் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும். ஆனால் பயிற்சிக் காலத்தின்போது உணவு பானங்கள், பௌதீக மற்றும் ஏனைய சொந்த செலவுகளை பயிலுநர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

iii. தெரிவு செய்யப்படும் பயிலுநர்கள், பயிற்சி நிறுவனத்தின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளுக்குக் கீழ்ப்படிந்து பயிற்சியை நிறைவு செய்வதோடு பயிற்சி காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்குக் கட்டுப்படுவதாகவும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

iv. பயிற்சிக் காலம் நிறைவடைவதற்கு முன், பயிற்சியிலிருந்து விலகுவதானால் அவர் அல்லது அவள் பொருட்டு அரசாங்கத்தினால் செய்யப்பட்ட செலவுகளை மீளளிப்பதற்கு கட்டுப்படுவதாகவும், அதற்காக பிணை உடன்படிக்கை ஒன்றுக்கு வருதல் வேண்டும்.

v. பயிற்சிக் காலத்தின்போது நடாத்தப்படும் தவணை, வருடாந்த அதேபோல் பயிற்சிக் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் இறுதி எழுத்து மற்றும் செயன்முறை பரீட்சைகளில் சித்தியடையும் பயிலுநர்களுக்கு NVQ - Level 6 மட்ட டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் என்பதுடன் பயிற்சிக்கு இயைபான தொழிலொன்றை வழங்குவதற்கு இந்த அமைச்சு அல்லது பயிற்சி நிறுவனம் கடப்பாட்டைக் கொண்டிருக்காது.

vi. விண்ணப்பதாரர் வேறெந்த உயர்கல்வி கற்கைநெறியொன்றிக்காக பதிவு செய்திருத்தல் கூடாது.

**சமன் தர்ஷன படிகோரால,**
**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு.**

# நாடு திரும்பியது இலங்கை அணி



எமது வீரர்களின் தவறு மற்றும் மோசமான ஆட்டம் காரணமாக டி20 உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது என்று நாடு திரும்பிய இலங்கை அணித் தலைவர் வனிந்து ஹசரங்க கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்ப சுற்றுடன் வெளியேறிய இலங்கை அணி நேற்றுக் காலை இலங்கை திரும்பியது. இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஹசரங்க,

'வீரர்கள் என்ற வகையில் நாம் செய்த தவறுகள் பற்றி எமக்குத் தெரியும். நாம் துடுப்பாட்ட வீரர்கள், பந்துவீச்சாளர்களாக நன்றாக செயற்படாததால் இவ்வாறு தோல்வியை சந்தித்தோம்' என்றார்.

இலங்கை அணி வழக்கமாக விமாநிலையத்தின் சாதாரண பயணிகள் பாதை வழியாக வெளியேறி செல்கின்றபோதும், அதற்கு பதில் நேற்று பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் 'சில்க் ரூட்' வழியாக விமானநிலையத்தில் இருந்து வெளியே வந்தனர்.

இந்த 'சில்க் ரூட்' வசதியை பெறுவதற்கு ஒருவருக்கு 50 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படுவதோடு, இலங்கை கிரிக்கெட் அணி அந்தப் பணத்தை செலுத்தி இந்த வசதியை பெற்றதாக விமான நிலைய பொறுப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக செய்தி வெளியாகியுள்ளது.

# சொமோத், சதமினி வெற்றி



ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த சமோத் டி சில்வா வெற்றியீட்டிய நிலையில் பெண்கள் பிரிவிலும் மேல் மாகாணத்தின் டபிள்யு.ஏ.ஏ. சந்தமினி வெற்றியீட்டினார்.

மஹியங்கனையில் கடந்த வார இறுதியில் ஆரம்பமான 48ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் சைக்கிளோட்டப் போட்டிகளில் முறையே சொமோத் டி சில்வா மற்றும் சந்தமினி ஆகியோர் வெற்றியீட்டினர்.

விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து இம்முறை போட்டிகளுக்கு நெஸ்ட்லே நெஸ்டமோல்ட் அனுசரணை வழங்குகிறது. இதில் முதல் இடம் பெற்றவர்களுக்கும் 50,000 ரூபா பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# பங்களாதேஷ் வீரருக்கு அபராதம்



நேபாள வீரருடன் மோதலில் ஈடுபட்ட பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் தன்சிம் ஹசனுக்கு போட்டிக் கட்டணத்தில் 15 வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேபாள அணிக்கு எதிரான ஆரம்பச் சுற்றுப் போட்டியின் நேபாள அணி பதிலெடுத்தாடிய நிலையில் மூன்றாவது ஓவரை வீசிய தன்சிம் நேபாள அணித்தலைவர் ரோஹித் பவுடலுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதன்போது நடுவர் தலையிட்டு இருவரையும் பிரித்து விட்டார். எனினும் போட்டிக்குப் பின்னர் இது தொடர்பில் கேட்டபோது பவுடல் கூறியதாவது, 'எம்மிடையே எதுவும் நடக்கவில்லை. அவர் வந்து பந்தை அடிக்கும்படி என்னிடம் கூறினார், பதிலுக்கு சென்று பந்தைப் போடும்படி நான் கூறினேன். வேறு ஒன்றும் நடக்கவில்லை' என்றார்.

இந்தப் போட்டியில் சிறப்பாக பந்துவீசிய தன்சிம் 7 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பங்களாதேஷ் அணி 21 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்நிலையில் அவர் ஐ.சி.சி. நடத்தை விதி 2.12 பிரிவை மீறியதாக ஐ.சி.சி. குறிப்பிட்டுள்ளது. இந்த விதி முறையற்ற வகையிலான உடல் தொடர்பு சம்பந்தமானதாகும்.

தவறை ஒப்புக்கொண்ட தன்சிம், ஐ.சி.சி. போட்டி மத்தியஸ்தரின் அபராதத்தையும் ஏற்றுக்கொண்டார். இதனால் இது தொடர்பில் உத்தியோகபூர்வ விசாரணை நடத்த தேவை ஏற்படவில்லை.

தவிர, கடந்த 24 மாதங்களில் இவருடைய முதல் குற்றமாக இது பதிவாகியதால் அவருக்கு ஒரு தரமிறக்கல் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## உலகின் மதிப்புமிக்க நிறுவனம் என்விடியா



உலகில் மதிப்பு மிக்க நிறுவனமாக மைக்ரோசொப்ட் நிறுவனத்தை பின்தள்ளி என்விடியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதன் பங்கு விலைகள் இதுவரை இல்லாத அளவு 136 டொலருக்கு உயர்ந்துள்ளன. நிறுவனத்தின் மதிப்பு தற்போது 3.34 டிரில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது.

அமெரிக்க நிறுவனமான என்விடியா, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்திற்குத் தேவையான கணினிச் சில்லுகளைத் தயாரிக்கின்றது. கடந்த சில ஆண்டுகளில் அதன் பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. நிறுவனத்தின் வியாபாரமும் லாபமும் உயர்ந்துள்ளன. அதன் வருவாய் இன்னும் உயரக்கூடும் என பல முதலீட்டாளர்களும் நம்புகின்றனர்.

## கடும் வெப்பம்: 550 ஹஜ் யாத்திரிகர்கள் மரணம்



இம்முறை ஹஜ் கடமையில் கடும் வெப்பம் காரணமாக குறைந்தது 550 யாத்திரிகர்கள் மரணித்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதில் அதிகபட்சமாக 323 எகிப்து நாட்டவர்கள் வெப்பம் தொடர்பான பாதிப்பினால் உயிரிழந்திருப்பதாக இரு இராஜதந்திரிகள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர். குறைந்தது 60 ஜோர்தானியர்கள் உயிரிழந்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல நாடுகளும் வெளியிட்ட உயிரிழப்பு எண்ணிக்கையின்படி இதுவரை மொத்தம் 577 பேர் உயிரிழந்திருப்பதாக ஏ.எப்.பி. வெளியிட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்காவில் உள்ள மிகப்பெரிய பிரேத அறைகளில் ஒன்றான அல் முவய்சமில் மொத்தம் 550 உடல்கள் இருந்ததாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

வசதி படைத்த முஸ்லிம்கள் வாழ்நாளில் ஒருமுறை செய்ய வேண்டிய ஹஜ் கடமையில் கடுமையான வெப்ப பாதிப்புக் குறித்து சவூதி அரேபிய நிர்வாகம் ஒரு மாதத்திற்கு முன்னரே எச்சரித்திருந்தது.

மக்காவில் உள்ள பெரிய பள்ளிவாசலில் கடந்த திங்கட்கிழமை (17) 51.8 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவானதாக சவூதி அரேபிய வானிலை ஆய்வு மையம் கூறியது.

## பிலிப்பைன்ஸ் கடற்பரப்பில் சீன கப்பல்கள் அத்துமீறல்

மேற்கு பிலிப்பைன்ஸ் கடற்பரப்பில் ஒரே நாளில் சீனாவின் 22 யுத்தக் கப்பல்கள் உட்பட 146 கப்பல்கள் அத்துமீறி பிரவேசித்ததாக பிலிப்பைன்ஸ் கடற்படைப் பேச்சாளர் கொமடோர் ரோய் வின்சன்ட் ட்ரினிடாட் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் முக்கிய பொருளாதாரப் பிராந்தியத்திற்குள் வரும் தென் சீனக் கடற்பகுதி மணிலாவின் ஒரு பகுதி என்று குறிப்பிட்டுள்ள அவர், எமது பங்காளிகளுடன் ஒருங்கிணைந்து எமது கடற்படையினர் அப்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

தென் சீனக் கடற்பரப்புக்காக சீனா, பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் போட்டியிடுவது குறிப்பித்தக்கது.

## காசாவில் தொடரும் மோதலுக்கு மத்தியில் இஸ்ரேலிய படை மனிதாபிமான வலயத்தில் தாக்குதல்: எழுவர் பலி



காசாவில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் பலஸ்தீன போராளிகளுக்கு இடையே நேற்றும் (19) மோதல்கள் இடம்பெற்றதோடு இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்களும் நீடித்தன.

இஸ்ரேலிய போர் விமானங்கள் முன்னர் 'மனிதாபிமான வலயம்' ஒன்றாக அறிவித்திருந்த ரபாவின் அல் மவாசி பகுதியில் உள்ள தற்காலிக கூடாரங்கள் மீது நடத்திய தாக்குதலில் ஏழு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று அதிகாலையில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலை அடுத்து அந்தக் கூடாரங்கள் தீப்பற்றி எரிந்ததாக பலஸ்தீன உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

இதில் உறங்கிக் கொண்டிருந்தவர்களே கொல்லப்பட்டதாக அந்த முகாமில் இருந்த பாத்திமா அல் கிக் என்ற வயது முதிர்ந்த பெண் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். 'பாதுகாப்பான இடம் என்று கருதப்பட்ட பகுதியிலே இஸ்ரேல் எம் மீது செல் குண்டுகளை வீசியது. இங்கு சிறுவர்கள் உறங்கிக்கொண்டிருந்தார்கள்' என்று அந்தப் பெண் கூறியதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தவிர தெற்கு காசாவின் கான் யூனிஸ் மற்றும் மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாம் மீது இஸ்ரேலியப் படை குண்டு வீசியதாக வபா குறிப்பிட்டது. காசா நகரின் வீடு ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா குறிப்பிட்டது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 24 பேர் கொல்லப்பட்டு மேலும் 71 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. மீட்பாளர்களால் அடைய முடியாத பகுதிகளில் பாதிக்கப்பட்ட கணிசமானவர்கள் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி இருப்பதாகவும் அது சுட்டிக்காட்டியது.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,396 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 85,523 பேர் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு ரபாவின் முக்கிய வீதி ஒன்றில் தினசரி மனிதாபிமான சண்டை நிறுத்தம் ஒன்றை இஸ்ரேல் இராணுவ அறிவித்தபோதும், இந்த சண்டை நிறுத்தம் மக்களுக்குத் தேவையான உதவிகள் அடையும் வகையில் அமையவில்லை என்று ஐ.நா. பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எகிப்து மற்றும் காசா இடையிலான ரபா எல்லைக் கடவையின் எகிப்து பக்கத்தை கடந்த மே ஆரம்பத்தில் இஸ்ரேல் கைப்பற்றியது தொடக்கம் அது மூடப்பட்டிருப்பதோடு அருகில் இஸ்ரேலிய எல்லையில் இருக்கும் காசாவுக்கான கெரெம் ஷலோம் எல்லைக் கடவையும் மோதல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே இயங்கி வருவதாக ஐ.நா. பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

காசாவில் உணவு, நீர், மருந்துக்கு தட்டுப்பாட்டு நிலவி வரும் சூழலில் அங்கு பஞ்சம் ஒன்று நெருங்கி வருவதாக ஐ.நா தொடர்ந்து எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## லெபனானில் முழு அளவில் போருக்கு இஸ்ரேல் தயார்



அமெரிக்கா பதற்றத்தை தணிக்க முயன்றபோதும் லெபனானுடன் முழு அளவிலான போருக்கான முடிவு விரைவில் எடுக்கப்படும் என்று இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் காட்ஸ் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லைப் பகுதியில் பரஸ்பரம் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் பதற்றத்தை தணிக்கும் முயற்சியாக அமெரிக்க பிரதிநிதியான அமோஸ் ஹொச்ஸ்டைன் லெபனானுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

எட்டு மாதங்களுக்கு முன்னர் காசா போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே மோதல் அதிகரித்திருக்கும் நிலையில், இஸ்ரேலின் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் மூத்த தளபதி ஒருவர் கடந்த வாரம் கொல்லப்பட்டதை அடுத்து நிலைமை மோசமடைந்துள்ளது.

இதனையடுத்து இஸ்ரேலிய இராணுவத் தளங்கள் மீது ஹிஸ்புல்லா இதுவரை இல்லாதவகையில் ரொக்கெட் மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியது.

இந்நிலையில் இஸ்ரேலின் ஹைபா துறைமுகத்தை சேதப்படுத்துவது தொடர்பில் ஹிஸ்புல்லா தலைவர் செய்யிது ஹசன் நஸ்ரல்லா எச்சரித்திப்பதோடு அந்தத் துறைமுகத்தின் ட்ரோன் படங்களையும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

இதற்கு எக்ஸ் சமூகதளத்தில் பதிலளித்திருக்கும் காட்ஸ், 'ஹிஸ்புல்லா மற்றும் லெபனானுக்கு எதிராக ஆட்டத்தின் விதிகளை மாற்றும் தீர்மானத்தை எடுக்கும் தருணத்தை நாம் மிகவும் நெருங்கியுள்ளோம். முழு அளவிலான போர் ஹிஸ்புல்லாவை அழித்துவிடும் என்பதோடு லெபனானை மோசமாக தோற்கடித்துவிடும்' என்று எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் லெபனானில் தாக்குதல் ஒன்றுக்கான செயல்பாட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டிருப்பதாகவும் தளத்தில் துருப்புகளின் தயார் நிலையை தொடர்ந்து அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் இஸ்ரேல் இராணுவம் பின்னர் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்று எட்டப்படும் வரை தாக்குதல்களை நிறுத்தப்போவதில்லை என்று ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் தெற்கு லெபனானில் எல்லை கிராமமான கியாம் உட்பட பல பகுதிகளிலும் இஸ்ரேல் நேற்று வான் தாக்குதல்களை நடத்தியதாக லெபனான் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தாக்குதல்களில் மூவர் கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லா தரப்பு தெரிவித்துள்ளது.

மறுபுறம் சிரியாவின் தெற்கில் இராணுவத் தளம் ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாக சிரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 20ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.